Registered as a magazine in Sri Lanka

# நிமிர்வு

ISSN 2579 - 2113

அரசியல் சமூக பொருளாதார செயற்பாட்டிதழ்

facebook.com/nimirvu youtube.com/nimirvu www.nimirvu.org

பார்வை – 58 கார்த்திகை, 2022 பக்கங்கள் – 24 விலை – ரூபா 20.00

# தமிழ் தலைமைகள் கோரும் சமஷ்டி முறையும் அதற்கான போராட்ட வழி வகையும்





- தற்சார்பு உணவுப் பண்பாடு எம்மை வழிநடத்த வேண்டும்
- ஈரான் போராட்டத்தின் முன்னணியில் பெண்கள்
- ஆக்கிரமிக்கப்படும் குரகல ஜய்லானி மசூதி






ஆய்வு – அறிவு – நிமிர்வு

# தற்சார்பு உணவுப் பண்பாடு எம்மை வழிநடத்த வேண்டும்

**ஐப்பசி 14 உலக உணவு தினத்தை முன்னிட்டு இலங்கை விவசாயத் திணைக்கள பண்ணை ஒலிபரப்புச் சேவையின் விவசாய வானொலி சஞ்சிகை நிகழ்ச்சியான களமும் வளமும் நிகழ்வுக்கு பேராசிரியர் சிறீஸ்கந்தராஜா (தகைசால் பேராசிரியர் – உப்சலா பல்கலைக்கழகம் – சுவீடன்) அவர்கள் வழங்கிய கருத்துப் பகிர்வுகளை இங்கு தொகுத்து வழங்குகிறோம்.**

– தொகுப்பு : துருவன் –



சென்ற ஆண்டு இதே காலத்தில் உலக உணவு தினத்துக்கான சிந்தனைகளை உங்கள் முன் வைத்த போது அந்நேரத்தில் உலகத்தை அச்சுறுத்திக் கொண்டிருந்த மூன்று C க்கள் பற்றி பேசினோம். அதாவது கோவிட் நோய், தொடர்ச்சியாக உணவு உற்பத்திக்கு நெருக்கடிகளை வழங்கிக் கொண்டிருக் கின்ற காலநிலை மாற்றம், உலகத்தில் வெவ்வேறு நாடுகளுக்கு இடையிலான மோதல்கள் இவை மூன்றும் Covid - Climate - Conflict என ஆங்கிலத் தில் C ஐ முதல் எழுத்தாகக் கொண்ட மூன்று C க்கள் எனப் பேசினோம். எமது உணவை, உணவு வழங்கலை, உணவுப் பாதுகாப்பை அச்சுறுத்துகின்ற இம் மூன்றோடும் Corporates என்று சொல்லப்படு கின்ற பெரு வணிக நிறுவனங்களையும் நான்காவது C ஆக சேர்த்துக் கொள்ளலாம் என்பதையும் நினைவு படுத்தி இருந்தேன்.

இன்று ஓராண்டுக்கு பின்னர் இப்போதும் கோவிட் தொடர்கிறது. எமது சூழலை வாழ முடியாத ஒன்றாக மாற்றிக் கொண்டிருக்கின்ற காலநிலை அச்சுறுத்தலை நாம் தொடர்ந்து எதிர்கொள்கிறோம். அதனைக் கவனிக்கக் கூட நேரமில்லாமல் நாங்கள் வாழ்க்கையை நடாத்திக் கொண்டிருக்கிறோம். உலகத்தையே உலுப்புகின்ற வகையில் உக்ரேனிய நாட்டில் ஏற்பட்டிருக்கிற யுத்தம் உணவு விலை அதி கரிப்பை, உர விலை அதிகரிப்பை, எரிபொருள் விலை அதிகரிப்பை பெரிய அளவில் உலக மட்டத் தில் ஏற்படுத்தியிருக்கின்றது. இந்த அச்சுறுத்தலும் ஓராண்டுக்கு முன் இருந்ததை விட அதிகரித்திருக் கின்ற இன்றைய சூழலில் நான்காவதான பெரு வணி கங்கள் எமக்கான உணவுத் தொகுதியை, உணவு வழங்கலை, உணவுப் பாதுகாப்பை தங்களுடைய கைகளில் எடுத்துக் கொண்டிருக்கின்ற முயற்சி இன்னும் சில படிகள் மேலோங்கி இருக்கின்றது என்றே சொல்ல வேண்டும்.

உணவு சார்ந்த இந்த நெருக்கடி சாதாரண உள்நாட்டு நெருக்கடியாக சென்ற ஆண்டு காணப் பட்டதும், உலக தேசங்களுக்கும் மக்களுக்கும் இடையிலான நட்புறவு தொய்வடைந்து எதிர்ப்புநிலை பெருமளவாக அதிகரிக்கின்ற சூழலில், இந்த ஓராண்டு காலத்தில் மிகத் தீவிரமான உணவு விலையேற்றம் மட்டும் என்றில்லாமல், உணவுப் பற்றாக்குறை, உணவு கிடைக்காத நிலை, எரிபொருள் நெருக்கடி இறக்குமதிக் கொள்கையில் இறுக்கம் எல்லாம் சேர்ந்து உலக மட்டத்திலான உணவு நெருக்கடி ஒன்றினை இன்று இலங்கை மக்களாகிய நாங்களும் எதிர்கொண்டிருக்கிறோம்.

அதே வேளையில் உர இறக்குமதித் தடை காரணமாக சென்ற ஆண்டு பெரும்போக பயிர்ச் செய்கை பாதிக்கப்பட்டதும், பின்னர் பல்வேறு நெருக் குவாரங்களின் காரணமாக செயற்கை உரங்கள் மீளவும் இறக்கப்பட்டுப் பெருந்தோட்டப் பயிர் களுக்கு மட்டும் உரம் வழங்க முடியும் என்கிற நிலையும் ஏற்பட்டிருந்தது. அக் காலப்பகுதியில் சீனாவிலிருந்து இயற்கை வழியில் பெறப்பட்ட உரங்களைக் கொண்டு வந்து பயன்படுத்த முடியுமா என்கிற வாதப்பிரதிவாதங்களும், பின்னர் உரக் கப்பல்கள் வந்து போன கதைகளும் எல்லோரும் அறிந்ததே. அதே வேளை 'நானோ யூரியா' (nano urea) என்ற திரவ யூரியாவை கொண்டு வந்து

எம்மிடையே ஏற்படுத்தப்பட்ட குழப்ப நிலைகளை எல்லாம் நாம் சந்தித்தோம்.

எமது வரலாற்றை பார்த்தோமானால் இன்றைய உணவு நெருக்கடி புதிய ஒன்றல்ல. சுதந்திரம் அடைந்த பின்னரான காலத்தில் 1974 ஆம் ஆண்டு இன்றுள்ளது போன்றே முன் எப் போதும் காணாத ஒரு உணவுப் பற்றாக்குறை, உணவு நெருக்கடி, உணவுப் பஞ்சம் என்பவற்றை இலங்கை கண்டது பலருக்கு நினைவிருக்கலாம். அதன் பல்வேறு பரிமாணங்களை அன்று இளை யோர்களாக நாங்கள் கண்டோம். அனுபவித்தோம். பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்யவெனப் புதுப்புது வழிகளையும் அன்றைய அரசு முன்வைத்திருந்தது.

1974 ஆம் ஆண்டளவில் தெற்காசியா விலேயே மிகவும் உன்னதமான முறையில் உணவைப் பெற்றுக் கொண்ட மக்கள், உலகத்தால் பேசப்படக் கூடிய ஆரோக்கிய நிலையில் வாழ்ந்த சமூகம், கல்வியில் மேம்பட்ட நிலையில் இருந்த நாடு என்ற பல்வேறு நற்பெயர்களை இலங்கை பெற்றிருந்தது. அந்நேரம் நடைமுறையில் இருந்த சோசலிசப் பொருளாதாரக் கொள்கைகளின் நடுவே நாட்டின் பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்வதில் சில நடைமுறைக் குளறுபடிகள் ஏற்பட்டன. அதையும் விட பெருமளவில் தேயிலை, தென்னை மற்றும் ரப்பர் எனும் பெருந்தோட்டப் பயிர்களின் ஏற்றுமதியில் பொருளாதாரம் தங்கியிருந்தது. தன்னுடைய வரவுக்கு மிஞ்சிய செலவில் உணவை இறக்கு மதி செய்ததனால் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. அந்நிய செலாவணி பற்றாக்குறை நிலவியது. அந்நேரம் மாணவர்களுக்கு உணவு வழங்க முடியாத நிலையில் பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டன. மரவள்ளி, இறுங்குப் பயிர்ச் செய்கை பெருமளவில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்கிற தேசிய மட்ட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. சோர்கம் (sorghum) என்று அழைக்கப்படுகின்ற தானியத்தை உற்பத்தி செய்து அதனை மாவுடனும் உணவில் ஒரு அங்கமாகவும் உட்கொண்டு வாழ்ந் தோம். அந்தநேரம் நிலைமையை சமாளிப்பதற்காக 40000 தொன் அரிசி சீனாவில் இருந்து இறக்கு மதி செய்யப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்டது. அது பெரிய செய்தியும் ஆகியது.

**“ பெரு வணிகங்கள் எமக்கான உணவுத் தொகுதியை, உணவு வழங்கலை, உணவுப் பாதுகாப்பை தங்களுடைய கைகளில் எடுத்துக் கொண்டிருக்கின்ற முயற்சி இன்னும் சில படிகள் மேலோங்கி இருக்கின்றது என்றே சொல்ல வேண்டும்”**

1974 உணவு நெருக்கடிக்குப் பின்னான ஐம்பது ஆண்டு காலத்தை மீள நோக்கினோமானால், அன்று ஏற்பட்ட நெருக்கடியினை ஒத்த வகையில் இன்று நாட்டினது வருமானம், இறக்குமதிச் செலவு இவை இரண்டுக்கும் இடையே ஏற்பட்டிருக்கின்ற வித்தியாசம் நாட்டில் மீளவும் மிகத் தீவிரமான உணவு நெருக்கடியை ஏற்படுத்தி இருக்கின்றமையை நாங்கள் அவதானிக்கலாம்.

இரண்டு வெவ்வேறான பொருளாதாரக் கொள்கைகளின் கீழ் இறுதியில் ஒரே வகையான உணவு நெருக்கடியினை நாம் சந்தித்திருக்கிறோம் என்பது இங்கே கவனத்துக்குரியது. முன்னையது பொதுவுடைமைத் தன்மை கொண்ட ஒரு அரசியல் கோட்பாடு எனக் கொண்டோமானால், இரண்டா வதினை முதலாளித்துவக் கொள்கையாகவே நாம் கொள்ள வேண்டும். 1977 ஆம் ஆண்டுக்கு பின் மேற்கொள்ளப்பட்ட அரசியல் கோட்பாடு, முற்று முழுதாக திறந்த சந்தை தாராளமயமாக்கப் பட்ட சந்தை என்ற வகைப்பட்டது. இரு வேறுபட்ட பொருளாதாரக் கொள்கைகளும் ஒரே உணவு சார்ந்த நெருக்கடியில் இந்நாட்டினைக் கொண்டு வந்து நிறுத்தியிருக்கின்றன என்று சொன்னால் எமக்குரிய பிரச்சனை கொள்கை, கோட்பாடுகளை வகுப்பதில் உள்ள சிக்கலா? அவற்றை நடைமுறைப்படுத்துவதில் சிக்கலா? அவற்றை முகாமைத்துவம் செய்வதில் எங்களுக்கு பற்றாக்குறைகள் உண்டா? இவற்றை நாம் இன்று மீளாய்வு செய்து பார்க்க வேண்டும்.

(18 ஆம் பக்கம் பார்க்கவும்)

தமிழ் ஊடகத் திரட்டு,
லக்சுமி கட்டிடம்,
ஞானபாஸ்கரோதய சனசமூக நிலைய வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

நிமிர்வு

மின்னஞ்சல் : nimirvueditor@gmail.com
இணையம் : www.nimirvu.org
தொலைபேசி இல : 021 223 2121

## ஆசிரியர் பார்வை

# 75 நாட்களுக்குள் தீர்வு?

அடுத்த ஆண்டு மாசி மாதத்துக்குள் அதாவது வரும் சுதந்திர தினத்துக்குள் தமிழர்களின் தேசிய பிரச்சினைக்கு தீர்வு வழங்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார். அதாவது 75 ஆண்டுகளுக்கும் மேலாக புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு 75 நாட்களில் தீர்வு தரப்போவதாக அவர் கூறியிருக்கிறார்.

இதன் தொடர்ச்சியாக வடக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்து பேசப் போவதாக ஜனாதிபதி கூறி இருந்தார். இதற்கு மறுப்பு தெரிவித்த ரெலோ கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இணைத்து பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும் என கூறியிருந்தது. இலங்கையின் அரச தலைமை வடக்கு - கிழக்கு என பிரித்தாள்வது தாயக கோட்பாட்டை சிதைக்கும் ஒரு நடவடிக்கை. இது சிங்கள பெருந்தேசியவாதத்தின் இன்னுமொரு சூழ்ச்சி. ஏற்கனவே பிரித்தாளும் சூழ்ச்சியில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற ரணில் இதிலும் பிரித்தாண்டு இனப்பிரச்சினைக்கான தீர்வை தள்ளிப்போடலாம் என எண்ணியிருக்கலாம்.

புதிய அரசியலமைப்பு ஒன்றை கொண்டு வரப்போவதாக ரணில் அறிவித்துள்ள நிலையில் அதற்கு பூரண ஆதரவளிப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அறிவித்துள்ளது. தற்போது 1978 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட இரண்டாவது குடியரசு யாப்பே அமுலில் உள்ளது. அதில் 21 திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

இலங்கையின் பொருளாதார நிலைமை தொடர்ந்தும் நெருக்கடிக்குள் சென்று கொண்டிருக்கிறது. இந்நிலையில் சர்வதேச நாணய நிதியமும் இலங்கையில் அரசியல் ஸ்திரத்தன்மை ஒன்று ஏற்பட வேண்டும் என வலியுறுத்தியதாக தெரிகிறது. சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுக்கள் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில் இலங்கைக்கு ஏற்கனவே கடன் வழங்கிய நாடுகளுடனும் கடன் மறுசீரமைப்பு தொடர்பிலான பேச்சுக்கள் தொடர்கின்றன. இந்நிலையில் சர்வதேச பொருளாதார நிலை இருள்மயமானதாக காணப்படுதாக சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது.

ஆனால், தமிழ்த் தேசிய அரசியல் இலக்கில் ஓரணியில் தமிழ் தலைவர்கள் இருக்கிறார்களா என்கிற கேள்வி இப்போது எழுந்துள்ளது. சிங்கள அரசு தீர்வை முன்வைக்கும் பின்னணியில் தமிழ் அரசியல் தலைமைகள் தமிழ்மக்களின் கோரிக்கைகளை வலுவாக வைக்கும் நிலையில் உள்ளனரா?

70 - 80 வருடங்களாக மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்கள அரசாங்கங்களால் பல்வேறு ஆணைக் குழுக்களை நிறுவியும் நிரந்தர அரசியல் தீர்வு தமிழ்மக்களுக்கு தரப்போவதாக கூறியும் பேசி பேசி கிழித்தெறியப்பட்ட ஏராளம் ஒப்பந்தங்கள் உள்ளன. ஒவ்வொரு முறையும் சிங்கள அரசின் துரோக வரலாற்றை மறந்து அப்படிக் கூறிய அரசாங்கங்களை நம்பி ஏமாந்த தமிழ் அரசியற் தலைமைகள் இம்முறையும் ஏமாறப் போகிறார்களா? அல்லது இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தமிழ் மக்கள் வேண்டும் தீர்வை மக்களின் பக்கம் நின்று உறுதியாக முன்வைக்கப் போகிறார்களா?

பொருளாதார நெருக்கடி காரணமாக தற்போது சர்வதேச நாணய நிதியம் போன்ற நிறுவனங்களின் அழுத்தத்தினால் அரைகுறை தீர்வையாவது முன்வைக்கும் நிலைக்கு சிங்கள அரசியல் தலைமை வந்துள்ளது. இந்நேரம் தான் தமிழ் தேசிய அரசியல் தலைமைகள் விழிப்பாக இருக்க வேண்டும். கடந்த கால பட்டறிவை கவனத்தில் கொள்ள வேண்டும். பேச்சுக்கு வாருங்கள் என்றவுடன் விழுந்தடித்துக் கொண்டு ஓடாமல், முதலில் பேச்சில் எவ்வாறான விடயங்களை உள்ளடக்க வேண்டும் என சிங்கள அரசியல் தலைமை வெளிப்படுத்த வேண்டும்.

அதைவிடுத்து எப்படியான தீர்வை தரப்போகிறோம் என்று கூட குறைந்த பட்சம் அறிவிக்காத அரசை நோக்கி உங்களின் முயற்சிக்கு நாங்கள் முழு ஒத்துழைப்பையும் தருவோம் என தமிழ் அரசியல் தலைமையான கூட்டமைப்பு சொல்வதனை எவ்வாறு நோக்குவது?

- செ. கிரிசாந் -

# தமிழ்த் தலைமைகள் கோரும் சமஷ்டி முறையும் அதற்கான போராட்ட வழிவகையும்?

-மு.திருநாவுக்கரசு-

**ஈழத்தமிழ் அரசியல் வரலாற்றறிஞர் மு. திருநாவுக் கரசு அவர்களால் 13.03.2022 அன்று நடாத்தப்பட்ட "தமிழ்த் தலைமைகள் கோரும் சமஷ்டி முறையும் அதற்கான போராட்ட வழிவகையும்" என்கிற உரை யாடல் வகுப்பின் முதல் பகுதி இங்கே பிரசுரமா கிறது.**



ஈழத்தமிழ் மக்களினுடைய பல்வேறு தரப்பை சேர்ந்த தலைவர்களும் வைத்திருக்கும் கோரிக் கைகளும் அந்த கோரிக்கைகள் செயல் வடிவம் பெறுவதற்கு உரிய நடைமுறைகள் பற்றியும் இங்கு பேசப் போகின்றோம். முக்கியமாக தமிழ் அரசியலில் அறிவியலை ஒரு முறைமையாக பார்க்க வேண்டும் என்கிற சிந்தனையின் அடிப்படையில் பேசப் போகிறோம்.

இன்று தமிழ் மக்கள் மத்தியில் காணப்படுகின்ற தலைவர்கள் மூன்று பெரும் பிரிவுகளுக்குள் அடங்கு கிறார்கள். அந்த மூன்று பெரும் பிரிவுகளுக்கும் அடிப்படையான ஒரு கோரிக்கை சமஸ்டி என்பது தான். இவற்றில் சில வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் ஒரு நாடு என்கின்ற அமைப்பில் தமிழர்கள் சிங்கள மக்களோடு சேர்ந்து ஒரு நாட்டுக்குள் சமஸ்டி அடிப்படையில் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்கின்ற கோரிக்கை இங்கு முன்வைக்கப்படுகிறது.

இந்த கோரிக்கையில் மூன்று பெரும் அணி களாக தமிழர்கள் உள்ளார்கள். ஒன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அவர்கள் செல்வநாயகத்தின் பாரம் பரியத்தில் வந்த சமஸ்டி கோரிக்கையை பற்றி சொல்கிறார்கள். அவர்களுடைய அடிப்படை கோரிக்கை தமிழரசு கட்சி ஆரம்பிக்கப்பட்ட காலத் தில் முன்வைக்கப்பட்ட சமஸ்டி கோரிக்கையை அடிப் படையாக கொண்டது. 1949 ஆம் ஆண்டு முதன் முறையாக சமஸ்டி கோரிக்கை தமிழ் தரப்பில் கொண்டு வரப்பட்டது.

மற்றையது கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி யினது. ஒரு நாடு இரு தேசம் என்கின்ற அடிப்படை யில், குறிப்பாக கனடாவில் காணப்படுகின்ற சமஸ்டி முறையை உதாரணம் காட்டி தமது தேர்தல் விஞ் ஞாபனத்தை வெளியிட்டு இருந்தார்கள்.

மூன்றாவதாக, விக்னேஸ்வரன் தலைமை யிலான தமிழ் மக்கள் தேசிய கூட்டணி அணியினர் கூட்டாட்சி (confederation) என்கிற அதிக உச்சபட்ச சமஸ்டி கோரிக்கையை முன்வைத்திருக்கிறார்கள். இந்த மூன்றும் குறைந்தபட்சம் சமஸ்டி ஆட்சி முறையை அடிப்படையாக கொண்டவை தான்.

இந்த மூன்று பிரிவினரும் முன்வைத்திருக் கின்ற கோரிக்கையை வரலாற்று ரீதியாகப் பார்ப் போம். வரலாற்றுப் பார்வை மிகவும் முக்கியமானது. அப்படி பார்த்தால் நகைப்புக்கு இடமான முறையில், நாங்கள் தலை கோணக் கூடிய வகையில் சமஸ்டிக் கோரிக்கையின் போக்கு எமது வரலாற்றில் இடம் பெற்று இருப்பதை நாங்கள் துயரத்துடன் பார்க் கலாம்.

மங்கோலிய புராணக் கதை ஒன்று உண்டு. மூன்று தலை நாகத்திற்கு ஒரு வயிறு இருந்தது. மூன்று தலைகளும் சேர்ந்து ஒரு வயிற்றுக்கு உணவு கொடுக்க முடியாமல் மூன்று திசையில் அடிபட்டு இறுதியாக அந்த மூன்று தலை பாம்பு இறந்து போய் விடுகிறது. இன்னொரு நாகம் இருந்தது, மூன்று வயிறு ஒரு தலை. அந்த ஒரு தலை உடைய நாகம் மூன்று வயிறுகளுக்கும் தாராளமாக உணவு கொடுத்து அந்த பாம்பு உயிர் வாழ்ந்ததாக அந்த புராணக்

**“எவ்வளவு பெரிய உயர்ந்த இலட்சியத்தை பேசுகின்றோம் என்பதல்ல முக்கியம். எவ்வளவு நடைமுறைச் சாத்தி யமானதை செய்கிறோம் என்பது தான் முக்கியம்”**

கதை கூறுகிறது. மங்கோலிய மன்னன் ஜெங்கிஸ் கான் தனது சொந்த பிள்ளைகளிடையே ஏற்பட்ட சிம்மாசன போட்டியின் போது இந்த கதையை கூறி இந்த கதையின் அடிப்படையில் வெற்றிகரமாக அந்த பிரச்சனையை தீர்த்து விட்டார். இந்த கதையில் மூன்று தலை நாகமும் ஒரு வயிறும் பற்றிய பிரச்சனையை முதலில் பார்ப்போம்.

இங்கு ஒரு சமஸ்டி கோரிக்கையை மூன்று பேரும் வைத்திருக்கிறார்கள், சின்ன சின்ன வித்தி யாசங்களோடு. ஆனால் மூன்று பேரும் மூன்று தலை களாக இருக்கிறார்கள். இந்த மூன்று தலை களாக இருப்பதனுடைய வரலாற்று வளர்ச்சி போக்கு என்னவென்பதை கேட்டால் இந்த மூன்று தலைகளும் ஒரு முன்னணியை உருவாக்கி தங்கள் வேறுபட்ட கொள்கைகளின் மத்தியில் ஒரு தலையாக சிந்தித் தால் அந்த ஒரு வயிற்றுக்கு சாப்பாடு போட முடியும். ஆனால் மூன்றாக வெவ்வேறு திசைகளில் சிந்திப் பது ஒரு போதும் இந்த ஒரு வயிற்றுக்கு சோறு போடாது. இங்கு மூன்று தலைகளும் அடிபட்டு இறுதியில் வயிற்றுக்கு சாப்பாடு இன்றி நம்மை சாகக் கொடுப்பதில் தான் முடியும். சோகமான இந்த கதையை எல்லோரும் மிகவும் ஆக்கபூர்வமாக கரிசனையில் கொள்ளல் வேண்டும்.

மேலும் ஒரு கதையை பார்ப்போம். ஏர்னெஸ்ட் ஹெமிங்வே (Ernest Hemingway) என்பவர் “The Old Man and the Sea” ஒரு நாவலை 1952 இல் வெளியிட்டார். அது தமிழில் “கடலும் கிழவனும்” என்ற பெயரில் வெளிவந்தது. அந்த நூலில் மார்லின் என்று சொல்லப்படுகின்ற பெரிய இன மீனை சந்தியாகோ என்ற ஒரு கிழவன் ஒரு படகில், கடலில் பல நாள் காத்திருந்து வெற்றிகரமாக பிடித்து விட்டான். ஆனால் அந்த விலையுயர்ந்த பெரிய ரக மீனை சிறிய படகிற்குள் இழுத்து போடுவது கடினமாக இருந்தது. மாறாக மீன் படகை இழுத்து கொண்டு போக தொடங்கி விட்டது. இப்பொழுது தனது பாதையில் படகு ஓடுவதற்கு பதிலாக அந்த பாரிய மீனின் பாதையில் அது இழுத்து செல்லும் இடம் எல்லாம் அந்த படகு அலைக்களிக்கப்பட்டது. மூன்று நாட்களாக போராடி அந்த மீனைக் கொன்று தனது படகின் ஒரு பக்கத்தில் அதனை இணைத்துக் கொண்டு சந்தியாகோ கரையை நோக்கி படகை செலுத்தினார். ஆனால், அந்த மீனில் இருந்து வந்த குருதி ஏனைய கடல் பிராணிகளை ஈர்த்தது. இறுதியாக படகு கரை சேரும் பொழுது அந்த பிரமாண்டமான மீன் கடல் பிராணிகளால் கபளீகரம் செய்யப்பட்டு விட்டது. அந்த மீனோடு அந்த கிழவன் போராடிய போராட்டங்கள் பிரமாண்ட மானது. இறுதியாக அந்த மீன் கரை ஒதுங்கிய பொழுது அதன் எலும்புக் கூடுதான் எஞ்சி இருந்தது. மீன் மிஞ்சவில்லை. தசை மிஞ்சவில்லை. இது தான் எங்களுடைய இன்றைய வரலாற்று போக்காக உள்ளது.

இன்று தமிழீழம் அரைவாசிக்கும் மேல் எலும் புக்கூடாகி விட்டது. இந்த எலும்புக்கூடாக இருக்கும் காட்சி எங்கிருந்து ஆரம்பித்தது என்று கேட்டால் பிரதானமாக சிங்கள குடியேற்றத்தில் இருந்து தான் ஆரம்பமாகியது. இந்த சிங்கள குடியேற்றத்தை சிங்கள தலைவர்கள் தமிழ் தலைவர்களை அர வணைத்து தான் செய்தார்கள். தமிழ் மக்களுடைய தாயகம் விழுங்கப்பட்டு சல்லடையாக்கப்பட்டு எலும்புக்கூடாக இருக்கின்றதை நாங்கள் குடியேற்றத் திற்குள்ளாகத்தான் பார்க்கலாம்.

இந்தக் கடலும் கிழவனும் என்ற கதை யில் இருக்கின்ற சோகத்துக்கு நாங்கள் ஆளாகக் கூடிய ஆபத்தைக் கொண்டிருக்கிறோம் என்பதை யாரும் கருத்தில் கொள்ள தவறக் கூடாது. எவ்வளவு பெரிய உயர்ந்த இலட்சியத்தை பேசுகின்றோம் என்பதல்ல முக்கியம். எவ்வளவு நடைமுறைச் சாத்தி யமானதை செய்கிறோம் என்பது தான் முக்கியம்.

தமிழ் மக்களின் மூன்று தலைமைகளும் இப்பொழுது என்ன கோருகிறார்கள்? தமிழ் மக்களை தங்களோடு ஒன்று திரண்டு நிற்குமாறும் தமிழ் மக்கள் திரண்டால் தாங்கள் மக்களின் திரட்சியின் துணையோடு போராடி விடுதலையை அடைவோம்

என்றும் கூறுகிறார்கள். அவர்கள் சொல்கிற விடுதலை சமஸ்டி. வட்டுக்கோட்டை தீர்மானத்திலிருந்து வெளியேறிய கொள்கை தான் சமஸ்டி. அதாவது இந்த மூன்று பெரும் அணிகளும் வட்டுக்கோட்டை தீர்மானத்திலிருந்து திட்டவட்டமாக வெளியேறி விட்டார்கள்.

இவ்வாறு வட்டுக்கோட்டைத் தீர்மானத்திலிருந்து வெளியேறிய நிலையில் இன்று காணப்படுகின்ற இந்த சமஸ்டி கோரிக்கையை அடைவதற்கு இவர்கள் சொல்லும் போராட்ட முறைகள் என்ன என்பது ஒரு கேள்வி. ஜனநாயக வழி முறையில் மக்களை அணி திரட்டி போராட்டத்தில் வெற்றி பெறுதல் என்கிற ஒரு கருத்து இங்கு ஒரு அமைப்பால் முன் வைக்கப்பட்டுள்ளது. பூகோள அரசியலை கையாண்டு அதை கையாள்வதன் மூலம் வெல்லலாம் என்று இன்னொரு கருத்து சொல்லப்படுகிறது. இங்கு பிரதானமானதாக முதலாவது கருத்தை எடுத்து கொள்ளலாம். அதாவது, தமிழ் மக்களை அணி திரட்டி வெற்றி பெறுவது என்பதை மூன்று பேரும் தான் சொல்கிறார்கள். அவர்களுடைய போராட்ட வழி முறைகள் பற்றி தெளிவான கருத்துகள் அவர்களிடம் இல்லை. அவர்களிடம் எந்த திட்டமிடலும் இல்லை. இப்படியாக நிலைமை இருக்கிறது.

இப்பொழுது வரலாற்று ரீதியாக ஒரு விடயத்தைப் பார்ப்போம். 1936 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை தமிழ் மக்கள் எப்பொழுதும் போராட்டத்தின் பக்கம் தான் நின்று கொண்டு இருக்கிறார்கள். எந்த ஒரு தலைவன் போராட முன்னுக்கு வருகிறாரோ அவர் நம்பிக்கையுடன் மக்களுக்கு எந்த ஒரு போராட்ட முறையை சொல்கிறாரோ அவருக்கு பின்னால் அந்த போராட்ட முறைக்கு பின்னால் மக்கள் நின்று இருக்கிறார்கள். ஏகத் தலைமைகள் எப்பொழுதும் தமிழ் மக்கள் மத்தியில் இருந்துள்ளன. மக்கள் அந்த தலைமைக்கு பின்னால் சென்று இருக்கிறார்கள். 1936ஆம் ஆண்டு ஜி. ஜி பொன்னம்பலம் தலைமைக்கு வந்து தமிழ் மக்களை ஒன்று திரட்டிய போது 1956 ஆம் ஆண்டு வரை மக்கள் அவருக்கு பின்னால் முழுமையாக நின்றார்கள். வேறு யாருக்கு பின்னாலும் போகவில்லை. முழுமையாக நின்றார்கள். ஆனால் கண்ட பலன் எதுவுமில்லை. எதிர்மறையான விளைவுகள் வந்தன.

பின்பு செல்வநாயகம் தமிழரசு கட்சியை தொடங்கி சமஸ்டி கோரிக்கையை முன்வைத்தார். இப்படி 1956ஆம் ஆண்டிலிருந்து 1976ஆம் ஆண்டு வரை செல்வநாயகத்திற்கு பின்னாலும் மக்கள் அப்படியே வந்தார்கள். அவர் கேட்டது எல்லாவற்றையும் மக்கள் செய்தார்கள். ஆர்ப்பாட்டம் செய்தார்கள், உண்ணாவிரதம் செய்தார்கள். ஆனால், செல்வநாயகம் தமிழ் மக்களுக்கு எதையுமே கொடுத்து விட்டு போகவில்லை.

இதில் ஒரு விடயத்தை கவனிக்க வேண்டும். தன் காலத்தில் தான் வெற்றி பெற தவறினால் ஐந்து வருடம் பத்து வருடத்திற்குள் வெற்றி பெற முடியாது என்று தெரிந்தால் அதற்கு பொறுப்பேற்று பதவி விலகுகின்ற கலாசாரம் ஒன்று ஜனநாயகத்தில் இருக்கிறது. ஆனால் தான் தோற்கடிக்கப்பட்டு களத்தை விட்டு போகும் வரையும் போராட்டத்தை அவர் விடவில்லை. போராட்டம் தோல்வி அடைந்த பின்பும் அவர் களத்தில் நிற்கிறார். முதலில் பொன்னம்பலத்துடன் 20 வருடங்கள் போய் விட்டன. செல்வநாயகத்துடன் 20 வருடங்கள் போய் விட்டன. கடவுள் தான் தமிழ் மக்களை காப்பாற்ற வேண்டும் என்று சொல்லி விட்டு அவர் போராட்டத்தை அப்படியே விட்டு விட்டு போய் விட்டார். எந்த வெற்றியையும் அவர் தமிழ் மக்களுக்கு தேடி கொடுக்கவில்லை. ஆனால் மக்கள் அவருக்கு பின்னால் நின்றார்கள்.

பின்பு அமிர்தலிங்கம் வந்தார். குறிப்பாக செல்வநாயகத்திற்கு பின்பு அவர் ஏகோபித்த தலைவராக அநேகமாக 81 ஆம் ஆண்டு வரை இருந்தார். சுமாராக 77ஆம் ஆண்டிலிருந்து 81 ஆம் ஆண்டு வரை அவர் இருந்தார். மக்களும் அவருடன் இருந்தார்கள். அவர் மாவட்ட அபிவிருத்தி சபை என்று ஒன்றை உருவாக்க முற்பட்ட போது தான் அவருடன் பிரிந்து அவருக்கு எதிரான கிளர்ச்சிகள் ஏற்பட்டன. அதுவரை அவர் எதையும் தேடி கொடுக்கவில்லை. இதுவரை நடந்த வரலாறு அப்படி தான் இருக்கிறது. பின்பு 81 ஆம் ஆண்டிலிருந்து 85 ஆம் ஆண்டு வரை ஆயுதம் தாங்கிய இயக்கங்கள் எழுந்தன. ஒரு தலைமை என்று இல்லை. பல்வேறு தலைமையில் பல இயக்கங்கள் இருந்தன. தங்களுக்கு இடையில் எதிரும் புதிருமாகவும் ஒன்றுபட்டும் பலவாகவும் காணப்பட்டு ஒரு நிலைமாறு கால கட்டம் நிலவியது. இங்கே ஒரு ஏக தலைமை என்று இருக்கவில்லை. அதாவது, ஆயுத போராட்ட காலத்தின் முதல்

பகுதி 81ஆம் ஆண்டிலிருந்து 85ஆம் ஆண்டு வரை அப்படி ஒன்று இருக்கவில்லை. 85ஆம் ஆண்டுக்கு பின்பு பிரபாகரன் தலைமையில் விடுதலைப்புலிகள் ஏக அமைப்பாக வளர்ந்தது. அன்றிலிருந்து முள்ளிவாய்க்கால் வரையும் தமிழ் மக்கள் அவர்கள் கேட்டது எல்லாவற்றையும் செய்தார்கள். அதிலும் நாங்கள் வெற்றியை பெறவில்லை.

இதன் பின்பு, 2009ஆம் ஆண்டிலிருந்து குறிப்பாக இன்று வரை பிரதானமாக தமிழ் மக்க ளுக்கு தலைமை தாங்கும் கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருக்கிறது. பன்னிரண்டு வருடங் களாக அவர்கள் எந்தவித வெற்றியையும் பெற்று கொடுக்கவில்லை. மாறாக எல்லா வகையிலேயும் ஏமாற்றங்களையும் "சிங்களவர்கள் ஏமாற்றி விட்டார் கள்" என்கிற வாக்கியத்தையும் தான் பார்க்கிறோம்.

1936 ஆம் ஆண்டிலிருந்து நாங்கள் தோல் வியின் வரலாற்றை சுமக்கும் மக்களாக இருக்கி றோம். ஆனால் மக்கள் போராட்டத்தோடு நிற் கிறார்கள். போராட்டத்தின் பின் நின்றார்கள். ஆகவே, மக்களை திரட்டுவது என்பது மட்டும் மூலோபாயமாக இருக்க மாட்டாது. மக்கள் நிற்கிறார்கள். மக்கள் நின்றும் வெற்றியை பெற முடியவில்லை. இதை நாங்கள் ஒரு ஆய்வு முறையாக ஒரு வரலாற்றினு டைய நடைமுறையாக புரிந்து கொள்ள வேண்டும். ஏற்றுக்கொள்ள வேண்டும். சிலவேளை உண்மைகள் தெரிந்தாலும் நாங்கள் தனிப்பட்ட விருப்பு வெறுப்பு காரணமாக அதை ஏற்க மறுத்தால் எங்களுடைய மக்களுக்கு நிச்சயமாக தீங்கு செய்பவராகவே ஆகுவோம். எங்களுடைய விடுதலைக்கு நாங்கள் பங்கம் விளைவித்தவர்களாகவே போவோம். அதை விடுத்து காணப்படும் யதார்த்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

உண்மையான நிலைமைகள் இப்படி தான் இருக்கின்றன. எனவே மக்கள் கடந்த நூறு ஆண்டுகளுக்கு குறையாமல் போராட்டத்தின் பக்கம் நூறு வீதம் நின்றார்கள். வெற்றி கிடைக்கவில்லை. எங்களுடைய உரிமைகள், வளங்கள், நலன்கள் எல்லாம் இருந்ததை விட மோசமாக பாதிக்கப்பட்டு இருக்கின்றன.

பேர்முடா வலய கடலுக்குள் கப்பல்களும், விமானங்களும், பிரயாணிகளும் காரணம் தெரியா மல் மூழ்கி போன வரலாறு பல நூற்றாண்டுகளாக இந்த பூமியில் நிகழ்ந்து கொண்டே இருந்தது. அண்மையில் அதற்கான விஞ்ஞான பூர்வமான காரணம் கண்டுபிடிக்கப்பட்டு இப்போது பேர்முடா வலய கடல் தவிர்க்கப்பட்டு வருகிறது. பல நூற்றாண் டாக பேர்முடா குடாவில் கப்பல்கள் தாண்டது போல எங்களுடைய தமிழ் அரசியல் பேர்முடாவில் ஈழத் தமிழர்களது நலன்கள் எப்பொழுதுமே தாண்டு கொண்டு இருக்கின்றன. எப்படி பேர்முடா அபாயத் தினுடைய காரணம் கண்டறியப்பட்டு இப்பொழுது அது தவிர்க்கப்பட்டு வருகின்றதோ அப்படியே எங் களுடைய நூறு ஆண்டு கால அரசியல் தோல்வி யின் காரணம் கண்டறியப்பட வேண்டும். நாங்கள் மீண்டும் மீண்டும் தொடர்ந்து பேர்முடா அரசியல் குடாவிற்குள் வீழ்ந்து கொண்டே இருக்கின்ற துயரத்தை அனைவரும் விருப்பு வெறுப்பு இன்றி பாரபட்சம் இன்றி எம் முன்னால் உள்ள மனிதர் களோடு, எம் முன்னால் உள்ள தலைவர்களோடு, எமக்கு தெரிந்த வரலாற்றோடு, எமக்கு தெரிந்த உண்மைகளோடு பரிசீலனை செய்ய வேண்டும். இதில் எந்த விருப்பு வெறுப்புக்கும் இடம் இல்லை.

இவ்வாறு உண்மைகளை சொல்லும் பொழுது, அதாவது நாங்கள் அழிந்து கொண்டு போவதற்கான காரணத்தை கண்டறியாமல் இந்த பேர்முடா குடா விற்குள் எங்களுடைய வாழ்வு மூழ்கி கொண்டு போகிறது என்று சொல்வதை நாங்கள் சிரத்தையுடன் பரிசீலிக்க வேண்டும். இது யாருக்கு எதிராகவும் சொல்லப்படுவதல்ல. அறிவியல் முறைமைக்குள்ளால் காரணத்தை கண்டுபிடித்து இந்த பேர்முடா குடாவை தவிர்க்கும் செயற்பாட்டை செய்ய வேண்டும்.

இனி நாங்கள் இந்த சமஸ்டி கோரிக்கையை பற்றி பார்ப்போம். இங்கு தலைவர்கள் சொல்கின்ற விளக்கங்களையும் சேர்த்துப் பார்த்து அந்த விளக் கங்களில் உள்ள தவறுகளையும் கண்டறிந்து நாங்கள் சரியான பாதைக்கு செல்வதற்கான வழியை பற்றி கண்டறிய வேண்டும். ஆனால் அந்த அளவுக்கு உண்மையை சொல்லி ஆராய்வதற்கு எங்களுடைய அரசியல் கலாசாரத்தில் இடமும் இல்லை, வாய்ப்பும் இல்லை. களத்தில் நிற்பவர்களின் அரசியற் செயற் பாடுகளோடு சம்பந்தப்பட்ட உண்மைகளை பற்றி சொல்ல முற்பட்டால் அதனை தனிப்பட்ட விடயமாக எடுத்து அதனை எதிர்க்க போய் விடுவார்கள். ஆதலினால் அதனை இங்கு தவிர்த்து விடுவோம்.

**(அடுத்த இதழில் தொடரும்)**



# நெகிழியை தவிர்ப்போம்: ஆரோக்கியமான வாழ்க்கையை வாழ்வோம்

-தொகுப்பு : தருராசன்-

**இந்தியாவின் தமிழ்நாட்டை தளமாக கொண்டு இயங்கி வரும் சுற்றுச் சூழல் அமைப்பான சூழல் அறிவோம் அமைப்பினரின் கேள்வி பதில் நிகழ்ச்சியில் இடம் பெற்ற சுற்று சூழல் சார் கேள்விகளுக்கான பதில்களை வழங்குகிறார் சூழலியல் செயற்பாட்டாளரான தீபக் வெங்கடாச்சலம்.**

**நெகிழியை (plastic) நன்முறையில் பயன்படுத்த வாய்ப்புள்ளதா?**

நெகிழியை நன்முறையில் பயன்படுத்த முடியாது. நெகிழி என்றாலே சுற்றுச் சூழலுக்கு தீமையான அங்கமாக போய் விட்டது. எப்படிப் பார்த் தாலும் தீமை தான். மறுசுழற்சி பண்ணினாலும் தீமை தான். முடிந்தவரை அதன் பயன்பாட்டைக் குறைத் துக் கொண்டு ஏற்கனவே இருக்கும் நெகிழிகளை பொருத்தமான மறுசுழற்சிக்கு உட்படுத்தலாம். வீதி களை அமைக்கலாம். வீட்டு மதில்களை அமைக்க நெகிழிப் போத்தல்களை பயன்படுத்தலாம். ஆனால் இதனை ஒரு நிரந்தரத் தீர்வாகவோ முழுமையான தீர்வாகவோ எடுத்துக் கொள்வதற்கு வாய்ப்பே இல்லை. ஆனால், காலப்போக்கில் நெகிழியை முற்றாக ஒழிப்பதே ஒரே வழி.

வீடுகளில் அன்றாடம் சேரும் நெகிழிகளை தாவரக்கழிவுகளுடன் சேர்க்காமல் தனியே சேகரித்து நெகிழி மறுசுழற்சி செய்யும் நிறுவனங்கள் கையில் கொடுத்தால் நல்லது. சில நிறுவனங்கள் கிலோவுக்கு பணம் கொடுத்தும் வாங்கிக் கொள்கிறார்கள். நெகி ழியை எரிப்பது என்பது பெரும் சூழல் மாசுபாட் டையும் குடும்பத்தினரின் ஆரோக்கியத்திலும் கடும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதனை கவனத்தில் கொள்ள வேண்டும்.

**நெகிழி உற்பத்தியை நிறுத்துவதற்கான வழி வகைகள் உள்ளதா? நெகிழிப் பயன்பாடே இல்லாத ஒரு நிலையை கொண்டு வர முடியுமா?**

ஒரு பொருளின் உற்பத்தி என்பது பயன் பாட்டாளரின் தேவையைப் பொறுத்ததே ஆகும். இங்கே பயன்பாட்டாளர்களுக்கு நெகிழி தேவைப் படுவதால் தான் அங்கே நெகிழியை உற்பத்தி பண்ணிக் கொண்டே இருக்கிறார்கள். உலக வணி கம் அவ்வாறு தான் தொழிற்படுகிறது. ஆனால் மக்கள் தங்கள் தேவைகளை மாற்றிக் கொள்வார்களே யானால் நெகிழி உற்பத்தியாளர்களும் தங்கள் வணிக நடவடிக்கையை மாற்றிக் கொள்வார்கள். சூழல் நேயம் மிக்க மாற்றுப் பொருள் தயாரிப்பில் ஈடுபடு வார்கள். இவையெல்லாம் எங்கள் சக்திக்கு அப்பாற் பட்டது தான். நேரடியாக போய் இவற்றை நிறுத்த முடியாது. அப்படி நெகிழி உற்பத்தியை உடனே நிறுத்துவோமாக இருந்தால் நெகிழி தொழிற் றுறையை சார்ந்து வாழ்ந்து வரும் மக்களுக்கு வேலை இல்லாமல் போகும். இதனால் சமூகத்தில் குழப்பம் ஏற்படும். தொடர்ச்சியான விழிப்புணர்வு களுக்கு ஊடாகவே சமூகத்தில் படிப்படியாக நெகிழிப் பாவனையை குறைத்து மாற்றத்தை கொண்டு வர முடியும்.

**குழந்தைகளுக்கான அணையாடை (diaper) மற்றும் பெண்கள் மாதவிடாய் காலங்களில் பயன்படுத் தும் சுகாதார அணையாடை (sanitary napkin) வயதானவர்கள் பயன்படுத்தும் அணையாடைகள் போன்றவை இன்று சுற்றுச் சூழலில் தீங்குகளை ஏற்படுத்துகின்றன. அது பற்றி.**

இது ஒரு முக்கியமான பிரச்சினை. இன்று நீங்கள் கடற்கரைகளில் பார்த்தால் கூட குழந்தைகளுக்கு பயன்படுத்தும் அணையாடைகள் ஆங்காங்கே சிதறிக் கிடைக்கும். இவை அதிகமாக கடந்த ஐந்து வருடங்களில் சேர்ந்த குப்பைகளாகவே உள்ளன. முன்பெல்லாம் மறுசுழற்சியாக பயன்படுத்தும் துணியையே குழந்தைகளுக்கும் பயன்படுத்துவார்கள். பெண்களின் சுகாதார அணையாடை அவர்களுக்கு ஆரோக்கியம் சார்ந்த பிரச்சினையாக இப்போதும் தொடர்கிறது. ஆனால் இவற்றை பாதுகாப்பான முறையில் அகற்றும் வழிமுறை செயற்படுத்தப்பட வேண்டும்.

### நெகிழியை எப்படி நமது வாழ்வில் தவிர்க்க முடியும்?

முக்கியமாக திருமணமாகி புதிதாக குடிபோகின்றவர்கள் தங்கள் வீட்டில் எவ்வாறு எல்லாம் நெகிழியின் பாவனையை குறைக்க முடியும் என திட்டமிட வேண்டும். கடந்த காலங்களில் பார்த்தால் வீட்டில் முதல் மட்பாண்டங்களும், பின் கண்ணாடி பாத்திரங்கள், அலுமினிய, வெண்கல பாத்திரங்களும் இருக்கும். இப்போது கூடுதலாக நெகிழி பாத்திரங்கள் வீடுகளை ஆக்கிரமித்து விட்டன. அன்றாடம் வீட்டில் பயன்படுத்தும் பொருள்களில் அதிகம் நெகிழி மயமாகிவிட்டது. ஆனால் இப்போதும் நெகிழிக்கு மாற்றாக என்ன வாங்கலாம் என சிறிது யோசிக்க வேண்டும். எல்லாவற்றுக்குமே எங்களிடம் மாற்று இருந்தது. கண்ணாடிப் பொருள்களை பாதுகாப்பாக பயன்படுத்தினால் நல்லது. ஆனால் அவை உடைந்தாலும் மீள் சுழற்சிக்கு பயன்படுத்த முடியும்.

### மக்கும் நெகிழி உருவாக்கியுள்ளதாக சொல்கிறார்களே? அது சுற்றுச் சூழலுக்கு பாதிப்பில்லையா?

மக்கும் நெகிழி என்று சொல்வதே ஒரு வியாபார தந்திரம் தான். இரண்டு விதமான மக்கும் நெகிழிகள் இருப்பதாக சொல்லப்படுகிறது. ஒன்று கரும்பு சக்கைகள் மூலமும் ஏனைய தாவர பகுதிகள் மூலமும் உருவாக்கப்படுகிறது. மற்றையது சாதாரண நெகிழியை வேறு பொருள்களோடு கலந்து மக்கும் நெகிழியாக கொண்டு வருகிறார்கள். சாதாரண நெகிழி மக்க நூறு வருடங்கள் ஆகும் என எடுத்துக் கொண்டால், மக்கும் நெகிழி என்று சொல்லப்படும் நெகிழி மக்குவதற்கு நான்கு வருடங்கள் ஆகலாம். இரண்டையுமே நீங்கள் எடுத்து சாக்கடையிலோ நீர்நிலையிலோ போட்டால் அதுவும் போய் நீர்நிலைகளை அடைத்துவிடும். இதுவும் அதே தான். உணவுச் சங்கிலியில் உள்ள உயிரினங்கள் உண்டாலும் நிச்சயமாக இரண்டுமே பாதிப்பை தான் ஏற்படுத்தும். மக்கும் நெகிழியை அதற்கான சூழல் வெப்பநிலை உள்ள இடங்களில் மட்டும் தான் மக்க வைக்க முடியும். இது இப்போதுள்ள பிரபலமான வியாபாரத் தந்திரம் என்று தான் சொல்ல முடியும்.

நாங்கள் நெகிழி பயன்பாட்டைத் தவிர்ப்பது மட்டும் தான் இன்று மாற்றாக இருக்கும். காய்கறி, பொருள்களை வாங்கும் போது துணிப்பைகளை பயன்படுத்துவது தான் மாற்றாக இருக்க முடியும். மக்கும் நெகிழிகள் என்று சொல்லப்பட்டாலும் அவை சார்ந்த கழிவுகள் திரும்ப திரும்ப உருவாகிக் கொண்டே இருக்கும். திரும்ப திரும்ப நெகிழிக் குப்பைகளை உருவாக்கும் செயற்பாட்டை நிறுத்த வேண்டும்.

குப்பை மேடுகளின் அமைப்பை பார்த்தால் அடியில் மண் இருக்கும், நடுவில் குப்பை இருக்கும் மேலே சூரிய ஒளி படும். ஒரு பொருள் மக்குவதென்றால் மண், நீர், சூரிய ஒளி மூன்றும் அவசியம். ஆனால் பொதுவாக குப்பை மேடுகளில் இந்த மூன்றில் ஒரு காரணி கிடைக்காது. ஆகவே நெகிழி கலந்து இருக்கும் குப்பை மேடுகள் சூழலை வெப்பமாக்கும் பசுமை வாயுக்களை வெளியிடும் இடமாக இருக்குமே

**"நெகிழியை நன்முறையில் பயன்படுத்த முடியாது. நெகிழி என்றாலே சுற்றுச் சூழலுக்கு தீமையான அங்கமாக போய் விட்டது. எப்படிப் பார்த்தாலும் தீமை தான். மறுசுழற்சி பண்ணினாலும் தீமை தான்"**

ஒழிய அவை நெடுங்காலத்துக்கும் மக்காது என்கிற உண்மையை தெரிந்து கொள்ள வேண்டும்.

**நெகிழி ஓர் அறிமுகம்**

நெகிழி என்பது, கச்சா எண்ணையில் இருந்து பெறப்படும் ஒரு செயற்கைப் பொருள். மேலும், எளிதில் மக்கும் தன்மை கொண்டது அல்ல. நெகிழி கண்டுபிடிப்பதற்கு முன்னர், இயற்கை வளங்களி லிருந்து பெறக்கூடிய சுற்றுச்சூழலுக்கு பாதுகாப் பான பொருட்கள் பயன்படுத்தப்பட்டன. ஒவ்வொரு உபயோகப்படுத்தப்பட்ட நெகிழிப் பொருளும், எந்த ஒரு மாற்றமும் இல்லாமல், நீண்ட காலம் பூமியில் நிலைத்திருக்கிறது. நெகிழி உபயோகத்தினால், உயிரினங்களுக்கு மரபணு பாதிப்புகள் ஏற்படுதல், நீர்நிலைகள் மாசுபடுதல், மற்றும் நிலங்கள் ஆக்கிர மிக்கப்பட்டு மழைநீர் நிலத்துக்குள் ஊடுருவது தடுக்கப்படல் என்று பல பாதிப்புகள் ஏற்படுகின்றன. ஒரு முறை மட்டும் உபயோகித்து தூக்கி எறியப் படும் நெகிழிப் பொருட்கள் பெருமளவில் கடலை சென்றடைகின்றன. அவை கடல்வாழ் உயிரினங் களின் சூழலை மாற்றியமைக்கின்றன. கடல்வாழ் உயிரினங்களின் உணவுச் சங்கிலிக்குள்ளும் நெகிழி கள் உள்வாங்கப்படுகின்றன. அதனால் அவற்றின் உடல் மாசுபடுகிறது. அவ்வுயிரினங்களை உண்பத னூடாக மனிதர்களின் உடல்களுக்குள்ளும் நுண்ணிய நெகிழித் துகள்கள் பரவலடைகின்றன. அவை மனி தர்களுக்கு பலவித நோய்களை தோற்றுவிக்கின்றன.

நெகிழி இன்று நாடு முழுவதும் பயன்படுத் தப்படும் ஒன்றாக திகழ்கிறது. காய்கறி பொட்டலங் கள், பால் கொள்கலன்கள், துணிக்கடைகள், மருந்துக் கடைகள், மின்னணு சாதனங்கள், மளிகை பொருட் கள், தேனீர் கடைகள், வாகனப் பொருட்கள், உணவுப் பொருட்கள் போன்ற எண்ணற்ற முறைகளில் நெகிழியின் பயன்பாடு அதிகமாக உள்ளது. ஆனால் இவை உபயோகப்படுத்தப்படும் நெகிழியின் தீமை கள் பற்றி யாரும் சிந்திப்பது இல்லை. குறைந்த விலையில் நெகிழிப் பைகள் கிடைப்பதாலும் வசதி யாக இருப்பதாலும் மக்கள் அவற்றை அதிகமாக பயன்படுத்துகின்றனர்.

பசு, நாய் போன்ற கால்நடைகள், மற்றும் வனவிலங்குகள் போன்றவை உணவுடன் நெகிழியை யும் சேர்த்து உட்கொள்வதால் உணவுக் குழாய்

## “ஒரு நெகிழிப் பையின் சராசரி பயன்பாட்டு நேரம் வெறும் 20 நிமிடம் மட்டுமே ஆனால் அது மக்குவதற்கு ஆகும் காலம் பல நூற்றுக்கணக்கான ஆண்டுகள்”

அடைபாட்டினால் அவை துன்புறவும், மரணமடைய வும் ஏதுவாகிறது. மேலும் வீட்டிலிருந்து தூக்கி யெறியப்படும் நெகிழிப் பொருட்கள் மண்ணின் (உயிர்வேதியியல்) தன்மையைப் பாதிக்கின்றன.

நெகிழியால் செய்யப்பட்ட குடிதண்ணீர்ப் புட்டிகள், குளிர்பானப் புட்டிகள் போன்றவை எக் காலத்திலும் அழியாது. இவைகள் சாக்கடைகள் போன்ற இடங்களில் அடைத்து கொண்டு பல இன்னல்களை ஏற்படுத்துகின்றன. நெகிழிப் பைகள் மற்றும் தூக்கி எறியப்பட்ட நெகிழிப் பொட்டலப் பொருட்கள் மழை நீர் ஊடுருவி நிலத்தடி சென்ற டைய இடையூறாக உள்ளன.

நம் அன்றாட வாழ்வில் தூக்கியெறியப்படும் பிரிக்காத குப்பைகளினால் நுளம்புகளால் பரவும் கொடிய நோய்கள் உருவாக காரணமாகிறது. நெகிழி உறைகளால் அடைக்கப்பட்ட பதப்படுத்தப்பட்ட, உணவு பொருட்களால் உடலுக்கு பல ஊறுகள் விளைகின்றன. நெகிழிப் பைகளால், கழிவு நீரில் தேக்கம் ஏற்பட்டு புதிய நோய்கள் பரவவும், சுகாதாரக் கேடு உருவாகவும் ஏதுவாகிறது.

மக்கள் பண்டைய காலங்களில் இருந்து வாழை இலையில் சாப்பிடுவதையும் துணிப்பை களில் தாம்பூலத்தை தருவதையும் வழக்கமாக கொண்டிருந்தார்கள். மட்பாண்டங்கள், பித்தளைப் பாத்திரங்கள், வெள்ளிப் பாத்திரங்கள் போன்ற வற்றையே தண்ணீர் சேமித்தல், நீர் அருந்துதல், போன்றவற்றுக்கு பயன்படுத்தினர். ஆனால், தற் போது பிளாஸ்டிக் மோகத்தில் இயற்கை வாழை இலைக்கு பதிலாக நெகிழித் தட்டுகள், நெகிழிக் குவளைகள், நெகிழி கரண்டிகள் போன்ற எண்ணற்ற

வடிவங்களில் செயற்கையை நாடிச் செல்கின்றனர். ஆனால் நெகிழியால் உருவாக்கப்படும் பொருட்கள் அனைத்தும் வேதிமுறையில் தயாரிக்கப்பட்டவை. அந்த பொருட்களை உணவு முறைகளில் நாம் பயன் படுத்தும் போது நம் உடலில் தேவையற்ற கொடிய வேதிப்பொருட்கள் சேர்கின்றன. இதனால் புற்று நோய் உட்பட பல வியாதிகள் உருவாகின்றன. மேலும் இது வளரும் நமது சந்ததியினரையும் வெகுவாகப் பாதிக்கிறது.

**நெகிழி மக்குவதற்கு ஆகும் காலம்**

| | |
|---|---|
| நெகிழிப் பைகள் | (100–1000 ஆண்டுகள்) |
| நெகிழிப் பஞ்சுக் கழிவுகள் | (1–5 மாதங்கள்) |
| காகிதம் | (2–5 மாதங்கள்) |
| தோல் காலணி | (25–40 ஆண்டுகள்) |
| அணையாடைகள் | (500–800 ஆண்டுகள்) |

**நெகிழிப் பாவனையை குறைக்க**

* மளிகைப் பொருட்கடை, துணிக்கடை, மருந்துகடை, மின்னணு சாதனக் கடை போன்ற இடங்களுக்கு செல்லும் போது தனியொரு சேமிப்பு துணிப்பையை வைத்துக் கொள்ள வேண்டும்.
* பதப்படுத்தப்பட்ட மற்றும் நெகிழியால் அடைக்கப்பட்ட உணவுப்பொருட்களை தவிர்க்க வேண்டும்.
* அன்றாட வாழ்வில் உபயோகப்படுத்தப்படும் நெகிழித் தட்டுகள், குவளைகள் மற்றும் ஏனைய நெகிழி சார்ந்த பொருட்களை தவிர்த்தல் வேண்டும்.
* நெகிழி உள்ளடங்கிய பொருட்களை திறந்தவெளிகளில் எரித்தல் கூடாது.
* நெகிழிப் புட்டிகள், நெகிழிப் பைகள், வணிக நெகிழிக் குப்பைகள், மளிகை பொருட்கள் அடைக்கப்பட்ட நெகிழிப் பைகள் போன்றவைகளை உருமாற்றவோ, அழிக்கவோ முடியாது.
* இப்பொருட்களை மீண்டும் மறுசுழற்சி செய்தல் பெருமளவுக்கு பயனளிக்காததாக உள்ளது. ஒரு நெகிழிப் பையின் சராசரி

## “ஒரு நெகிழிப் பையின் சராசரி பயன்பாட்டு நேரம் வெறும் 20 நிமிடம் மட்டுமே ஆனால் அது மக்குவதற்கு ஆகும் காலம் பல நூற்றுக் கணக்கான ஆண்டுகள்”

பயன்பாட்டு நேரம் வெறும் 20 நிமிடம் மட்டுமே ஆனால் அது மக்குவதற்கு ஆகும் காலம் பல நூற்றுக் கணக்கான ஆண்டுகள்.

* கடலில் மிதந்து கொண்டிருக்கும் கழிவுகளில் 90% நெகிழி சார்ந்த பொருட்களே காணப்படுகின்றன. இது நெகிழிப் பொருட்களை மறுசுழற்சி செய்வதில் மனிதகுலம் தவறி விட்டதைக் காட்டுகிறது. தற்போது உற்பத்தி செய்யப்படும் நெகிழியில் வெறும் 7% மட்டுமே மறுசுழற்சி செய்யப்படுகிறது.
* அனைத்து வணிகர்களும், பொதுமக்களும் தமக்கென நெகிழி தவிர்ப்பு முறைகளை வைத்துக் கொள்ள வேண்டும். நெகிழியை தவிர்க்க முடியும் என்ற எண்ணம் எல்லாத் தரப்பினரிடமும் உருவாக வேண்டும்.
* நெகிழியை தவிர்ப்பது விவசாய நிலம், மணல், நீர்நிலைகள், விலங்கினங்கள், சுற்றுச்சூழல் மேம்பாடு அடைதல், தட்ப வெப்ப நிலையை சமன்படுத்துதல் போன்றவைகள் மூலம் நம் நாடு தூய்மையாகவும், பசுமையாகவும் இருக்க உதவும்.
* நெகிழி இல்லாத தேசமாக எமது பிரதேசங்களை மாற்றுவோம் என ஒவ்வொரு குடிமகனும் உறுதிமொழியை எடுத்துக் கொள்ளுதல் அவசியம்.
* ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியும் நெகிழிப் பொருட்களுக்கு மாற்றாக இயற்கையில் கிடைக்கும் மக்கும் தன்மை கொண்ட பொருட்களை பயன்படுத்தி நெகிழி இல்லா உலகை உருவாக்குவோம்.

# காணாமல் ஆக்கப்படுதல் - காணாமல் போதல் என்றால் என்ன?

**2009 இல் தமிழினப் படுகொலை நடந்து பத்தாண்டுகளின் பின்னரும் எமது ஊடகப் பரப்பிலும், அரசியல், சிவில் சமூக பொது பரப்பிலும் காணாமல் ஆக்கப்பட்டோரை காணாமல் போனோர் என விழிக்கும் நிலை உள்ளது. இந்நிலையில் இந்த சொல்லாடல்களை சரியான முறையில் பயன்படுத்த வேண்டும் என்கிற நோக்கில் சிறிய விளக்கம் கீழே தரப்படுகிறது.**



-இசைப்பிரியன்-

### 01. காணாமல் ஆக்கப்படுதல் என்றால் என்ன?

குறித்த ஒரு நபரை விரும்பாத ஒரு அரசியல் தலைமை அல்லது ஒரு இராணுவத் தலைமை அல்லது அரசு சார்பு துணை ஆயுத குழுக்கள், அவரை அவரது குடும்பத்திலிருந்து அல்லது வீட்டிலிருந்து தூக்கிச்சென்று விட்டாலோ, அல்லது கைதுசெய்து காணாமல் போகச்செய்வதாலோ, அதன் பின்னர் அவருடன் தொடர்பு கொள்வதற்கு அவர்களது குடும்பத்துக்கு எந்தவிதமான வழியும் இல்லாமல் போய்விடுகிறது. அவர் உயிருடன் இருக்கிறாரா? இல்லையா? என்பது கூட தெரியாமல் போய்விடும். இதையே 'காணாமல் ஆக்கப்படுதல்' என்கிற சொல் பதத்தில் அழைக்கிறார்கள்.

### 02. காணாமல் போதல் என்றால் என்ன?

குடும்பத்தில் எழும் சச்சரவுகளை (பிணக்குகள்) அடுத்து மனஸ்தாபங்களுடன் (தன்னிச்சையாகவோ, துரத்தப்பட்டோ) வீட்டை விட்டு கிளம்பிச் செல்லும் நபர்கள் சிலர், மனம் ஆறுதல் அடைந்து மறுபடியும் வீடு திரும்ப இஸ்டம் இல்லாமலும், தமது குடும்பத்தினருடன் தொடர்பினை பேணும் மன விருப்பம் இல்லாமலும் (வைராக்கியம் வளர்த்துக் கொண்டு) தமக்கு பாதுகாப்பு என்று உணரும் ஏதாவது இடம் ஒன்றில் நிரந்தரமாகவே தங்கி விடுகின்றனர். இவர்கள் தமது நடமாட்டம் (சீவிப்பு) தொடர்பில் குடும்பத்தினருக்கு சிறு தகவலேனும் சென்றடைந்து விடக்கூடாது என்பதில் கூடியளவில் கவனம் எடுத்து நடை, உடை, பாவனை அனைத்திலும் தம்மை உருமறைப்பு செய்துகொண்டோ, அல்லது தம்மை அடையாளப்படுத்தாமல் (தமது சுயத்தை வெளிக்காட்டிக்கொள்ளாமல்) நன்கு திட்டமிட்டு ஒளிவுமறைவு வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருப்பர்.

மேலும் கோவில் திருவிழாக்கள் – கலை நிகழ்ச்சிகள் உள்ளிட்ட சனங்கள் அதிகமாக ஒன்றுகூடும் இடங்களிலும் கூட்டநெரிசலில் அகப்பட்டு சிறுவர்கள் – குழந்தைகள் – முதியவர்கள் ஏதேச்சையாக வழிதவறி விடுகின்றனர். இதேபோல தமக்கு முன்னர் அறிமுகம் இல்லாத பிரதேசங்களுக்கு பிரயாணம் செய்யும் நபர்களும் கூட, அப்பிரதேசம் தொடர்பான நிலபுல அறிவும், போக்குவரத்து பரிச்சயமும் இல்லாமல் வழிதவறி விடுவதுண்டு. மண் சரிவு, வெள்ளம், கடல் சீற்றம் உள்ளிட்ட இயற்கை அனர்த்தங்களிலும் பலர் சிக்குண்டு அவற்றினால் அள்ளுப்பட்டு கொண்டு செல்லப்படுவதுண்டு. இவ்வாறான சந்தர்ப்பங்களில் மட்டுமே, உலக வழக்கத்திலும் – பழக்கத்திலும் 'காணாமல் போதல்' என்கிற சொற் பதம் பயன்படுத்தப் படுகின்றது.

### 03. தடுத்து வைக்கப்படும் காலங்களில் 'காணாமல் ஆக்கப்படுதலின் அரசியல்'

எதிர்ப்பாளர்களை உடல் ரீதியாக அழித்தொழிப்பது மட்டுமல்ல, சமூகத்தையும் பயமுறுத்துவதே இந்த அரசியலின் நோக்கம் ஆகும். சுரண்டப்பட்ட தொழிலாளர்களும் – பிற உழைக்கும் வர்க்க மக்களும் ஒன்று சேர்வதும், ஒடுக்கப்பட்ட தேசிய இனமக்கள் தமது உரிமைகளுக்காக கிளர்ந்தெழுந்து போராடுவதும், வேறு வகையான சமூக கட்டமைப்புக்காக செயல்படுவதும், இந்த அரசியலின் மூலமாக தடுக்கப்படுகின்றது. இவற்றுக்கு தலைமை தாங்கும் இயக்க மற்றும் தொழில்சங்க தலைவர்களும், இவற்றில் தீவிர ஈடுபாடுடைய செயல்பாட்டாளர்களும் – தொழிலாளர்களும் கடத்தப்பட்டோ, கைதுசெய்யப்பட்டோ, தடுத்து வைக்கப்பட்டு படுகொலை செய்யப்படுகின்றனர்.

04. 'காணாமல் ஆக்கப்பதல்' ஒரு ஆயுதமாக பயன் படுத்தப்படுகிறது.

(இலங்கை உட்பட) சில நாடுகளில் ஜன நாயக முறைமையை அல்லது விடுதலை சுதந் திரத்தை கோருபவர்களை அடக்கவோ, குற்ற செயல்களில் ஈடுபடுபவர்களை அடக்கவோ அல்லது பயங்கரவாதத்தை அடக்கவோ, இவற்றுடன் தொடர் புடையவர்களை 'கடத்தி காணாமல் ஆக்குவதை' ஒரு ஆயுதமாகவும் பயன்படுத்துகிறார்கள். ஆனால் இப்படியான அனைத்து சம்பவங்களிலும் 'கட்டாய மாக காணாமல் போகச்செய்யப்படுதல்' என்பது தடை செய்யப்பட வேண்டும் என்று ஐ.நா வலியுறுத்துகிறது.

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் சட்ட நட வடிக்கைகளுக்கு உரித்துடையவர்கள் என்றும், அவர்களுக்கு என்ன நடந்தது? என்பதை அறிந்து கொள்ளும் உரிமை அவர்களது குடும்பத் தினருக்கு உள்ளது என்றும் ஐ.நா கூறுகிறது. எனினும் இப்படிகாணாமல்போகச்செய்யப்படுவோரைஇரகசிய சித்திரவதை முகாம்களில் அடைத்தோ அல்லது இரகசியமாக படுகொலை செய்தோ, யாரும் அறி யாத இடத்தில் புதைத்து விடும் அபாய நிலைமைகள் இன்னமும் தொடர்கின்றன.

கடத்தப்பட்டவர்கள், 'காணாமல் ஆக்கப் பட்டுள்ளனர்' என்றே பொதுவாக பலருக்கும் தெரிந்திருக்கும். கடத்தப்பட்டவர்களின் உறவினர் கள், அவர்களது உயிரை எண்ணி கவலைப்படுவ துடன், அவர்கள் திரும்பிவருவார்கள் என்று நம்புகின் றனர். அச்சமுற்றுள்ள உறவினர்கள் நம்பிக்கையுடனும், சந்தேகத்துடனும் காலம் கழிக்கின்றனர். இவ்வாறு உலகெங்கும் பல இலட்சம் பேர்கள் காணாமல் போகச்செய்யப்பட்டுள்ளார்கள். எத்தனை பேர்கள் என்று குறிப்பிட்டு நிச்சயமாக சொல்ல எந்த அமைப்பும் முயற்சி எடுக்கவில்லை.

**ஆள்கடத்தல் மற்றும் கைதுகள் நிகழ்த்தப்பட்ட சந்தர்ப் பங்களும் – இடங்களும்**

* அரச கட்டுப்பாட்டு பகுதிகளில் வசித்தவர்கள். (தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை சேர்ந்தவர்கள் அல்லது அந்த இயக்கத் துக்கு சார்புடையவர்கள் என்ற சந்தேகத் தின் பெயரில் கைதுசெய்யப்பட்டோ, கடத்தப் பட்டோ காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்)

**"(இலங்கை உட்பட) சில நாடுகளில் ஜனநாயக முறைமையை அல்லது விடுதலை சுதந்திரத்தை கோருபவர்களை அடக்கவோ, குற்ற செயல்களில் ஈடுபடுபவர்களை அடக்கவோ அல்லது பயங்கரவாதத்தை அடக்கவோ, இவற்றுடன் தொடர்புடையவர்களை 'கடத்தி காணாமல் ஆக்குவதை' ஒரு ஆயுதமாகவும் பயன்படுத்துகிறார்கள்"**

* விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கட்டுப் பாட்டு பிரதேசத்திலிருந்து அரச கட்டுப்பாட்டு பகுதிகளுக்கு பிரயாணம் செய்தவர்கள். (விடுதலைப்புலிகள் இயக்கத்தின் உறுப்பினர் கள் அல்லது முகவர்கள் என்ற சந்தேகத் தின் பெயரில் கைதுசெய்யப்பட்டோ, கடத் தப்பட்டோ காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்)
* மே 2009ம் வருடம், முள்ளிவாய்க்காலில் யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப் பட்ட தருணத்தில் ஆயுதங்களை களைந்து விட்டு நிராயுதபாணிகளாகவும், பாரிய விழுப்புண்களுடன் தாமாகவே இராணுவத் தினரிடம் சரணடைந்த போராளிகளும், போராளிக் குடும்பங்களும் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.
* முல்லைத்தீவு நகரம், வட்டுவாகல், ஓமந்தை சோதனைச்சாவடி பகுதிகளிலும், வவுனியா செட்டிக்குளம் பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருந்த அகதி முகாம்களிலும், இராணுவத்தினர் கேட்டுக்கொண்டதற்கு அமைய, குடும்பத்தினரால் கொண்டு செல்லப்பட்டு இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்ட போராளிகள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

ஆகவே, சர்வதேச மனித உரிமைச் சட்டங்களுக்கும் – ஐ.நா பிரகடனங்களுக்கும் முரணான இத்தகைய 'கட்டாயமாக காணாமல் போகச்செய்யப்படுதல்' நடவடிக்கைகள், ஆட்சி யாளர்களினதும் – அரசுகளினதும் நலன்கள் சார்ந்த 'அரசியல் நிகழ்ச்சி' நிரலின் பிரகாரம் நின்று நிதானித்து நன்கு திட்டமிட்டு நிகழ்த்தப்பட்டுள்ளன.

# ஈரான் போராட்டத்தின் முன்னணியில் பெண்கள்

**நன்றி:** www.ncr-iran.org
**தமிழாக்கம் – நிமிர்வு**




குர்திஸ் இனத்தைச் சேர்ந்த மாசா அமினி தனது சகோதரனை சந்திப்பதற்காக புரட்டாதி 13, 2022 அன்று ஈரானின் தலைநகரான தெகிரானிற்கு வந்திருந்தார். அவர் அணிந்திருந்த ஹிஜாப் ஈரான் அரசாங்கத்தின் விதிமுறைகளுக்கு அமைவாக தலைமயிரை முழுதாக மறைக்கவில்லை என்று மத ஒழுக்க நெறிகளை கண்காணிக்கும் அரச காவலர்களால் அவர் தளைப்படுத்தப்பட்டார்.

தளைப்படுத்தப்பட்டு சிறைக்கு கொண்டு செல்லப்பட்ட வாகனத்திலேயே அவர் மீதான சித்திர வதைகள் ஆரம்பமாகி விட்டன. அவருடன் வாகனத்தில் கொண்டு செல்லப்பட்ட ஏனைய பெண்கள் அதனை உறுதிப்படுத்தி உள்ளனர். அவர் தடுத்து வைக்கப்பட்டிருந்த இடத்திலும் அவர் மீது வன்முறை பிரயோகிக்கப்பட்டது.

தளை செய்யப்பட்டு 2 மணித்தியாலங்களின் பின்னர் அவர் தெகிரானில் உள்ள கஸ்ரா (Kasra) வைத்தியசாலைக்கு மயங்கிய நிலையில் கொண்டு செல்லப்பட்டார். புரட்டாதி 16, 2022 அன்று நினைவு திரும்பாமலே மாசா அமினி இறந்து போனார். 22 வயதேயான மாசா அமினி இஸ்லாமிய சர்வாதிகார அரசினால் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டு விட்டார்.

புரட்டாதி 17 ஆர்ப்பாட்டக்காரர்கள் அமினிக்கு சிகிச்சையளித்த வைத்தியசாலையை முற்றுகையிட்டனர். ஆர்ப்பாட்டக்காரர்களை அடக்க பொலிஸ் வரவழைக்கப்பட்டது. கண்ணீர்ப்புகை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. மேலும் பல இடங்களில் ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பமாகின. "பெண், வாழ்வு, சுதந்திரம்" (Woman, Life, Freedom) என்ற கோசங்களை முன்வைத்தவாறு ஆர்ப்பாட்டங்கள் நாளுக்கு நாள் அதிகரித்தன.

அரசாங்கத்தின் இரும்புக்கர அடக்குமுறைகளையும் மீறி நாடு முழுவதும் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. மக்களின் இந்த துணிச்சலான போராட்டங்களை விட அவற்றைத் தலைமை தாங்குபவர்களே உலகின் பெரும் கவனத்தை ஈர்த்திருக்கிறார்கள். ஈரானில் மிகமோசமான அடக்குமுறைக்கு முகம் கொடுக்கும் பெண்களே அவர்கள். வடமேற்கு ஈரானில் ஐப்பசி இரண்டாம் வாரம் 15 வயது சிறுமி ஒருவர் தனது பள்ளியில் நடந்த சோதனையின் போது பாதுகாப்புப் படையினரால் தாக்கப்பட்டதால் உயிரிழந்ததாக ஆசிரியர் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

மாசா அமினியின் கொலைக்கு நீதி கோரி ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பமாகினாலும், ஈரான் முழுவதும் அலை போல எழுந்துள்ள ஆர்ப்பாட்டங்கள், ஊழல் நிறைந்த அடக்குமுறை அரசை மாற்ற வேண்டும் என்ற தேசிய எழுச்சியை சுட்டி நிற்கின்றன. ஈரான் மக்களை பல வழிகளிலும் துயரங்களுக்கு உள்ளாக்கி கொண்டிருக்கும் ஆணாதிக்க அரசை மாற்ற வேண்டும் என்ற அபிலாசையை வெளிப்படுத்தி நிற்கின்றன.

ஈரான் எங்கிலும் தகவல் தொடர்புகளுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ள போதிலும் அங்கிருந்து கசிந்து வரும் காணொளிகள் பெண்களின் துணிகரமான போராட்டங்களை காண்பிக்கின்றன. மிருகத்தனமான அடக்குமுறைகளைக் கையாளும் படைகளை அவர்கள் பின்தள்ளிக் கொண்டு முன்னேறுவதைக் காட்டுகின்றன. "சர்வாதிகாரிக்கு மரணம் வேண்டும்" (death to dictator) என்று அவர்கள் பகிரங்கமாக கோசமிடுவதை காட்டுகின்றன.

இந்தப் போராட்டம் திடீரென ஏற்பட்ட ஒன்றல்ல. ஆண்டுக் கணக்காக ஈரானிய பெண்களை அரசு அடக்கியதின் விளைவே இந்த எழுச்சி. அதே

வேளை அவர்களை அடக்கி வைப்பதில் அரசாங்கம் தோல்வியடைந்து விட்டது என்பதை இந்த எழுச்சி காட்டுகிறது.

1979 ஆம் ஆண்டு ஆட்சியைக் கைப்பற்றிய காலத்தில் இருந்து மத அடிப்படைவாத ஆட்சி பெண்களை குறி வைத்துக் கொண்டே இருக்கிறது. ஈரானிய பெண்களின் வளர்ச்சி பழமைவாத முல்லாக்களின் அதிகாரத்துக்கு சவாலாக இருந்தது. ஆட்சியைக் கைப்பற்றிய ஓராண்டுக்கு உள்ளேயே பெண்கள் ஹிஜாப் அணிவது கட்டாயமாக்கப்பட்டது. மத ஒழுக்க நெறிகளை கண்காணிக்கிறோம் என்ற போர்வையில் பெண்கள் மீது அமிலம் தெளிப்பது, கத்தியால் குத்துவது என்று அரச காடையர்கள் வெறியாட்டம் ஆடத் தொடங்கினார்கள்.

அன்று ஈரானிலிருந்த முற்போக்கு எதிர்த்தரப்பாக இருந்த மக்கள் போராட்ட அமைப்பு (People's Mojahedin Organization) இந்தச் சட்டத்தை வன்மையாக கண்டித்தது. தாமாகவே விருப்பப்பட்டு தலையாடைகளை அணிந்து கொண்டிருந்த இந்த அமைப்பைச் சேர்ந்த பெண்கள் அந்தப் போராட்டத்தில் முன்னிற்கு நின்றார்கள். தமக்கு வேண்டிய ஆடைகளை அணிவதற்கு தமது சகோதரிகளுக்கு இருக்க வேண்டிய உரிமைக்காக அவர்கள் போராடினார்கள். இந்த அமைப்பைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான பெண்கள் 1980 களில் அரசாங்கத்தால் கொல்லப்பட்டார்கள்.

கட்டாயமாக தலைமறைப்பு ஆடை அணிய வேண்டும் என்ற சட்டம் பெண்களுக்கு எதிராக இயற்றப்பட்ட சட்டங்களில் ஒன்று மட்டுமே. ஈரானின் அரசியல் அமைப்பு பெண்களின் மதிப்பு ஆண்களின் மதிப்பின் பாதி மட்டுமே என்று கருதுகிறது. பலதார மணத்தை அனுமதிக்கிறது. மிலேச்சத்தனமான கௌரவக் கொலையை ஊக்குவிக்கிறது. சமூகத்தில் பெண்களுக்கு சமபங்கு கிடைப்பதை முற்றாக தடை செய்கிறது.

ஈரானின் பொதுமக்கள் சட்டக்கோவையின் 942 ஆவது சரத்து ஆண்கள் பல தாரங்களை மணக்கலாம் என்று சொல்கிறது. இந்த திருமணங்கள் நிரந்தரமானதாக இருக்க வேண்டுமென்பதில்லை, தற்காலிகமானவையாகவும் இருக்கலாம். மேலும் இந்த சரத்து ஆண்கள் பெண்களை விட இரண்டு மடங்கு சொத்துரிமை உடையவர்கள் என்று சொல்கிறது. ஒரு ஆண் பல தாரங்களை மணந்திருந்தால் சொத்தில் பாதி அவருக்கும் எஞ்சியது மட்டுமே பல தாரங்களிற்கிடையே சமமாக பிரிக்கப்பட வேண்டும் என்று சொல்கிறது.

அந்தச் சட்டக்கோவையின் ஏனைய சரத்துக்கள் பெண்களை ஆண்களின் பாலியல் அடிமைகள் என்பது போன்று காட்டுகின்றன. உதாரணமாக ஒரு 9 வயது பெண்பிள்ளை அவளது தகப்பனால் ஒரு திருமணத்திற்கு உட்படுத்தப்படலாம். அவள் கணவனின் அனுமதி இல்லாமல் வீட்டை விட்டு வெளியே போவதோ, வேலை செய்வதோ, வேறு இடங்களுக்கு பயணிப்பதோ தடை செய்யப்பட்டுள்ளது.

1041 ஆம் சரத்து ஒரு பெண் பிள்ளையின் பாதுகாவலர் அனுமதிக்கும் பட்சத்தில் அப்பெண் பூப்படைய முதலே மணம் முடிக்க அனுமதிக்கப்படும் என்று சொல்கிறது. 1210 ஆம் சரத்திற்கு எழுதப்பட்டுள்ள குறிப்பு ஒன்றில் ஒரு பெண் முதிர்ச்சியடைந்தவளாக கருதப்படுவதற்கும் சட்டரீதியாக தனது முடிவுகளுக்கு பொறுப்புடையவளாக இருப்பதற்குமான வயது 9 என்று சொல்கிறது. இது பெண்களை அதிகபட்சமான சமூக மற்றும் சட்ட ரீதியான தாக்குதல்களுக்கு முகம் கொடுக்க வைக்கிறது.

ஈரானின் அரசியலமைப்பின் 2 ஆம் கோட்பாடு, "கடவுளுக்கு முன்னான பொறுப்புக்கூறலுடன் ஒரு ஆணின் கண்ணியம், உயர்ந்த மதிப்பு மற்றும் சுதந்திரம் என்பன பிணைந்துள்ளன. இது நீதித்துறையின் தொடர்ச்சியான விளக்கத்தின் மூலம் புதுப்பிக்கப்படுகிறது." என்பதை வலியுறுத்துகிறது. இந்த கற்கால அரசியலமைப்பின் 10ஆம் கோட்பாடு "குடும்பம் என்பது இஸ்லாமிய சமுதாயத்தின் அடிப்படை அலகு என்பதால், அனைத்து சட்டங்கள், ஒழுங்கு முறைகள் மற்றும் தொடர்புடைய திட்டமிடல் ஆகியவை குடும்பத்தை உருவாக்குவதற்கும், அதன் புனிதத்தைப் பாதுகாப்பதற்கும், இஸ்லாமிய உரிமைகள் மற்றும் நெறிமுறைகளின் அடிப்படையில் அதன் உறவுகளை உறுதிப்படுத்துவதற்கும் வழிநடத்தப்பட வேண்டும்." என்கிறது.

இந்த ஆணாதிக்க சட்டங்கள் பயங்கரமான கௌரவக் கொலைகளுக்கு வழிவகுக்கின்றன. கடந்த மாசி மாதம் பட்டப்பகலில் குசஸ்தான்

(Khuzestan) மாகாணத்தில் ஒருவன் தனது மனைவியை பொதுவிடத்தில் வைத்து கழுத்தை அறுத்துக் கொன்ற காணொளியை பார்த்து உலகமே அதிர்ந்தது. 17 வயதேயான மோனா ஹேடாரி இந்த கொடூரமான ஆணாதிக்க சட்டங்களுக்கு பலியாகிப் போனாள். ஈரானில் ஒவ்வொரு வருடமும் சராசரியாக 375 தொடக்கம் 450 வரையான கௌரவக் கொலைகள் நடக்கின்றன. இந்தக் கொடூரக் கொலைகளில் ஈடுபடும் கணவர்களையோ தகப்பன்களையோ தண்டிக்காமல், கொலையாளிகளை தப்ப வைக்க ஈரானின் அரசியலமைப்பு வசதியளிக்கிறது.

ஒரு முஸ்லீம் ஆண் வேண்டுமென்றே ஒரு பெண்ணைக் கொன்றால் பழிக்குப் பழி என்ற கொள்கையின் படி அவர் கொல்லப்பட வேண்டும். ஆனால், இஸ்லாமிய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 382 இன் படி, கொல்லப்பட்டவரின் பெற்றோர்கள் அந்த ஆண் செலவளித்த பணத்தில் பாதியை அவரது பெற்றோருக்குச் செலுத்தாத வரையில், அவர் கொல்லப்படமாட்டார். ஆனால், ஒரு பெண் தற்காப்புக்காக கூட ஒரு ஆணைக் கொன்றால், கொல்லப்பட்டவரின் பெற்றோரின் வேண்டுகோளின் பேரில் அவள் தூக்கிலிடப்படலாம்.

### மாற்றத்தின் உந்துசக்தியாக பெண்கள்

அரசின் கட்டமைக்கப்பட்ட ஆணாதிக்கத்துக்கு ஈரானிய பெண்கள் பயந்து அடங்கிப் போகவில்லை. அரசுக்கு எதிரான ஈரான் எதிர்ப்பு தேசிய பேரவை (National Council of Resistance of Iran) இல் பல துணிச்சல் மிக்க பெண்கள் தலைவர்களாக இருக்கிறார்கள். ஈரானில் அடிப்படை மாற்றம் ஒன்றை ஏற்படுத்த அவர்கள் போராடுகிறார்கள். இந்தப் பெண்களை அரசு பல வகைகளிலும் தொல்லைகளுக்கு உள்ளாக்கி வருகிறது. 1988 ஆம் ஆண்டு பலர் மரணதண்டனைக்கு உட்படுத்தப்பட்டார்கள். அவர்கள் தமது கரங்களை உயர்த்திய வாறு அரசுக்கு எதிரான கோசங்களை உரத்துச் சொல்லியபடி தூக்கு மேடைக்கு போனார்கள்.

இன்று நடக்கும் போராட்டத்திலும் பெண்கள் தமது பலத்தையும் தலைமையையும் வெளிக்காட்டுகிறார்கள். அரசின் கையாலாகத்தனத்தை வெளிக்கொண்டு வருகிறார்கள். அவர்கள் ஆணாதிக்க அரசுக்கு எதிரான போராட்டங்களை ஒழுங்குபடுத்தி தலைமை தாங்குகிறார்கள்.

1996 ஆனி 21 இல் NCRI இன் தலைவராக தெரிவு செய்யப்பட்ட திருமதி மரியம் ராஜாவி லண்டனில் ஆற்றிய உரையில் ஈரான் பெண்களின் சக்தியைப் பற்றி பேசினார். அரசாங்கம் எதிர்பார்க்காத வகையில் அதற்கு சாவு மணியை பெண்களே அடிப்பார்கள் என்று அவர் சொன்னார்.

“உங்களுக்கு முன் பாலின பாகுபாட்டின் வரலாற்றையும் வலியையும் அனுபவித்த பெண்களும், எதிர்காலத்தைச் சேர்ந்த குழந்தைகள், ஆண்கள் மற்றும் பெண்களும் உங்கள் மீது தங்கள் நம்பிக்கையை வைத்துள்ளனர் என்பதை நான் மீண்டும் வலியுறுத்துகிறேன். சமத்துவம், அமைதி, ஜனநாயகம் மற்றும் வளர்ச்சி என்பவற்றை கொண்ட பொற்காலமாக நமது வரலாற்றைத் திருப்பப் போவது நீங்கள்தான்.” என்று அவர் சொன்னார்.

“வெற்றி உங்களுக்கு முன்னால் உள்ளது. அது உங்களுக்கு சொந்தமானது, உங்களுக்காக காத்திருக்கிறது. ஆம், இன்றைய ஒடுக்கப்பட்ட பெண்கள் நாளைய வெற்றியாளர்கள். அவர்களின் குரல்கள் என்றென்றும் எதிரொலிக்கும்.” எனவே மாசா அமினியின் பெயர் ஈரானிய மக்கள் புரட்சி என்று பலர் நம்பும் ஒன்றின் குறியீடாக மாறுவதில் ஆச்சரியமில்லை. ஈரானிய பெண்கள் தங்கள் எதிர்ப்பை இரத்தத்தால் செலுத்தி வருகின்றனர். அவர்கள் தங்கள் இரத்தத்தால் எதிர்காலத்திற்கு மை தீட்டுகிறார்கள். ஈரானியப் பெண்கள் நாட்டின் சுதந்திரப் போராட்டத்தின் தடம் பதித்தவர்கள்.

பிரபல பிரெஞ்சு கவிஞரான அரகோர்ன் (Aragorn) ஒருமுறை எழுதினார்: “பெண்களே ஆண்களின் எதிர்காலம்.” இந்த ஒரு அற்புதமான தீர்க்கதரிசனத்தின் உண்மையான உருவகமாக ஈரானிய பெண்கள் இருக்கிறார்கள். ஈரானிய பெண்கள் தனிமனித சுதந்திரத்திற்காக மட்டும் போராடவில்லை. அவர்கள் தேசத்தின் அவலத்தையும் ஆளும் மதவாத ஆட்சிக்கு எதிரான அத்தேசத்தின் போராட்டத்தையும் அடையாளப்படுத்துகின்றனர். திருமதி ராஜாவி அவர்கள் கூறியது போல் மாற்றத்திற்கான சக்தி அவர்கள்.

(3 ஆம் பக்க தொடர்ச்சி)

உலக மட்டத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பிருந்த நிலையை விட இன்னும் பலகோடி மக்கள் உணவுப் பற்றாக்குறையால் அல்லற்படு கிறார்கள் என்று புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. உணவுப் போதாமையால் உலகில் 82 கோடி மக்கள் தவிக்கிறார்கள். 230 கோடி மக்கள் வாராந்தம் தமது உணவுத் தேவையை சமாளிக்க முடியாதவாறு இருக் கிறார்கள். சோமாலியா நாட்டின் இவ்வாரம் அறி விக்கப்பட்ட தகவலின்படி இன்னும் ஒரு வாரத்தில் அங்கே உணவில்லாமல் சிறு குழந்தைகள் உட்பட மக்கள் பலரும் உயிரிழப்புகள் ஏற்படும் பெருமள வில் இடப்பெயர்வும் நடந்து கொண்டிருக்கிறது. இப்படி ஒரு மோசமான நிலை இலங்கை மக்களுக்கு ஏற்படா விட்டாலும் இலங்கையின் வறிய மாவட்டங்களின் பட்டியலில் இரண்டாவதாக இருக் கின்ற முல்லைத்தீவில் 60 வீதமான வீடுகளில் உணவு போதாமையால் அல்லல்படுகிறார்கள். பலர் வறுமை கோட்டுக்கு கீழே சென்று விட்டார்கள் என்று 'பிள்ளைகளை காப்பாற்றுவோம்' (save the children) என்ற அமைப்பு தகவல் வெளியிட்டுள்ளது.

உலக உணவு தினத்தின்போது உணவுப் பிரச்சனையை வெறுமனே வழங்கலில் உள்ள பிரச் சினையாக மட்டும் பார்க்க முடியாது. உணவு உற்பத்திக்கு வேற்று நாடுகளில் மட்டும் தங்கியிருக் காமல் அதாவது உணவு இறக்குமதியை நம்பி காத்திருக்காமல், பொருளாதார நெருக்கடியின் போதும் உணவுத் தேவையை சமாளிக்கும் நிலையை நாம் அடைய வேண்டும் என்றால் தற்சார்பு மிக்க உணவுத்தொகுதியை வளர்த்தெடுத்து அதனை செயற்படுத்துகின்ற சமூகமாக எம்மை வழிநடத்த வேண்டும் என்ற உண்மைகள் தெட்டத் தெளிவா கின்றன.

உணவு உரிமை, உணவு இறைமை அல்லது உணவு இறையாண்மை என வெவ்வேறு சொற் பதங்களால் குறிக்கப்படும் கருத்துநிலை பற்றி இவ் விடத்தில் பேசுவது பொருத்தமாய் இருக்கும். எமக்கு உணவு போதாமை எனும் நிலை ஏற்படும் போது அந்த உணவு போதிய அளவில் சரியான தரத்தில் கிடைக்க வேண்டும் என்பது எமக்கான உரிமை மட்டுமல்ல அதனை உறுதிபடுத்துவதே உணவு பாதுகாப்பு (food security) என அரசுகளும்,

## "தற்சார்பு மிக்க உணவுத் தொகுதியை வளர்த்தெடுத்து அதனை செயற்படுத்து கின்ற சமூகமாக எம்மை வழிநடத்த வேண்டும்"

பன்னாட்டு உதவி நிறுவனங்கள் பேசிவருவது உண்மை. ஆனாலும், வெறுமனே உணவின் அளவு, தரம் என்பவற்றுக்கு அப்பால், வேறொரு நிலைப் பாடும் உள்ளது.

நாம் எமக்கான உணவினை எவ்வளவில் உட்கொள்ள வேண்டும் என்ற விபரங்களைத் தாண்டி எந்த உணவை நாங்கள் உண்ண வேண்டும் என்பதும் அந்த உணவு யாரால் உற்பத்தி செய்யப் படுவதை நாம் விரும்புகிறோம், என்ன வகையில் அது உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்ற கரிசனை களும் உணவை உட்கொள்ளும் அதனை வாங்கும் நுகர்வோர் மத்தியில் ஏற்பட வேண்டியது இங்கே அவசியமானது. விலை கொடுத்து வாங்கும் மக்கள் எது வேண்டும் என்பதை தெளிவாகச் சொல்வார் களாக இருந்தால் அதனை உற்பத்தி செய்து விளை வித்து வழங்குவதற்கு எல்லா நாடுகளிலும் உள்ளது போல் இங்கும் விவசாயிகள் இருப்பார்கள்.

நாம் எதை உண்ண வேண்டும் என்பதனை வேறு யாரோ தீர்மானிக்கும் இடத்துக்கு வேகமாக சென்று சிதறிப் போகாமல், இந்த உணவை முடிந்த அளவு இயற்கைக்கு ஏற்ற வகையில், எம்முடைய இயற்கை வளங்களுக்கு ஏற்ற வகையில், எங்களு டைய பாரம்பரியத்துக்கும் ஆரோக்கியத்துக்கும் உகந்ததாக, நச்சுப் பொருள்கள் கலக்காத உணவாக உட்கொள்ள வேண்டும் என்பதை நாமே தீர்மானிக்கும்

வல்லமையையும் உரிமையினையும் எமது கையில் வைத்துக் கொள்வதனையே உணவு இறையாண்மை என்கிறோம்.

உணவு சார்ந்த விடயத்தில் கொஞ்சம் தீவிரமாக சிந்திக்கக் கூடிய மக்களாக நாம் மாற வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது. நிபுணத்துவம், தொழிநுட்பம், புதிய பயிர்கள், புது வர்க்கங்கள், ஏற்றுமதி, அதனால் பெரு வருமானம் என்பவற்றை எமக்கு அறிமுகம் செய்வதற்கு பலரும் வருகிறார்கள், வந்து கொண்டும் இருப்பார்கள்.

எம்முன்னால் வைக்கப்படும் ஒவ்வொரு தெரிவுகளையும் விவசாயிகளான நாங்களும் விவசாய உற்பத்திகளை உணவாக உட்கொள்ளும் மக்களாகிய நாங்களும் அவை ஒவ்வொன்றையும் சரியான முறையில் மதிப்பீடு செய்து முடிவுகளை எடுத்தோமானால் எமக்கு இது வேண்டும், இது வேண்டாம், என்று சொல்லக்கூடிய பலத்தை நாம் எமது கையில் வைத்துக் கொண்டோமானால் நாம் வலுமிக்க சமூகமாக பெரிய நெருக்கடிகளையும் சமாளிக்க கூடியவர்களாக வாழ்ந்து கொள்ளலாம். இந்த உரிமையை வேறு யாரிடமோ அல்லது தமது இலாபத்துக்காக உழைக்கும் ஒரு நிறுவனத்திடமோ அல்லது ஒரு வர்த்தக உற்பத்தியாளரிடமோ கையளித்து விட்டோமானால் நாங்கள் மீளவும் இந்த நெருக்கடி நிலையை தொடர்ந்தும் சந்தித்துக் கொண்டே இருப்போம்.

ஒவ்வொருவரும் தத்தமது மாவட்டங்கள், நிலப்பரப்புகள், கிராமங்கள் அவற்றுக்கு உகந்த வகையிலான உணவு உற்பத்தியை அவரவர் மண் நிலத்தன்மைக்கு ஏற்ற வகையில் விவசாயத்தை மேற்கொள்வது அவசியம். இதன் மூலம் மண் நலத்தையும் மண் வளத்தையும் காப்பாற்ற வேண்டியவர்களாக நாம் இருக்கின்றோம்.

கடந்தவாரம் நான் சுவீடனில் தங்கியிருந்த போது ஐரோப்பிய நாடுகளில் குறிப்பாக சோவியத் கட்டுப்பாட்டில் இருந்த நாடுகளில் அன்று மேலோங்கி இருந்த கூட்டுறவு முயற்சிகளுக்கு என்ன நடந்தது என்பதனை ஆய்வு செய்த அறிஞர் வந்திருந்தார்.

இங்கும் ஒரு காலத்தில் கூட்டுறவு முயற்சிகள் இருந்தன. பின் தாராளவாத சிந்தனை கொண்ட போக்கின் போது அவை மெதுவாக வலுவிழந்து பெரும்பாலான இடங்களில் அற்றுப் போயிருக்கின்றமை நாம் நன்கறிந்ததே.

**“உள்ளூர் மட்டத்தில் உள்ளூர் சுழற்சி வட்டமான ஒரு உணவுத் தொகுதியையும், தன்னிறைவை நோக்கிய விவசாய உற்பத்தியையும், நல்ல ஆரோக்கியமான பாரம்பரியத் தன்மை கொண்ட உணவை வழங்குகின்ற விவசாயிகளையும் குடி மக்களாகிய நாம் ஆதரிக்க வேண்டும்”**

அங்கு சோவியத் கம்யூனிச காலத்துக்கு பின்னான நிலையில் பழைய கூட்டுறவு முறையை எவ்வாறு மீளக் கொண்டு வரலாம் என அவர்கள் சிந்திக்கிறார்கள் என்பது குறித்த அடிப்படை விடயங்களை அந்த அறிஞர் தெளிவுபடுத்தி இருந்தார். ஆகக் குறைந்தது விவசாயிகளின் உற்பத்திப் பண்டங்களைச் சந்தைப்படுத்தும் வழிமுறைகளிலாவது கூட்டுறவு வகையில் இயங்குவதன் மூலம் கிடைக்கும் பல இலாபங்களை இந்த நாட்டு விவசாயிகள் விளங்கிக் கொண்டுள்ளார்கள் என அவர் தெரிவித்த போது அதில் எமக்கும் சில நல்ல பாடங்கள் இருக்கின்றன என்பதை நான் புரிந்து கொண்டேன்.

எனவே உள்ளூர் மட்டத்தில் உள்ளூர் சுழற்சி வட்டமான ஒரு உணவுத் தொகுதியையும், தன்னிறைவை நோக்கிய விவசாய உற்பத்தியையும், நல்ல ஆரோக்கியமான பாரம்பரியத் தன்மை கொண்ட உணவை வழங்குகின்ற விவசாயிகளையும் குடி மக்களாகிய நாம் ஆதரிக்க வேண்டும். எந்த உணவு எமக்கு வேண்டும் என்றும் குறிப்பிட்ட அவ் உணவுக்குரிய பெறுமதியை தெரிந்து அதற்கேற்ற விலையினைக் கொடுத்து வாங்க நாம் தயாராக இருக்கின்றோம் என்றும் சொல்லக்கூடிய நுகர்வோராக நாம் இருந்தோமானால் இரண்டு பகுதியினரும் சேர்ந்து எமக்கான ஒரு நல்ல உணவுத் தொகுதியை நாம் வளர்க்க முடியும். அதுவே இன்றைய உலக உணவு தினத்துக்கான செய்தியாக அமைகிறது.

**கூட்டாக சிந்திப்போம், கூட்டாக கொள்கைகளை வகுப்போம். ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்குவோம்.**

# ஆக்கிரமிக்கப்படும் குரகல ஜய்லானி மசூதி





ட்விட்டரிலிருந்து iman @imansaleeem
கார்த்திகை 11, 2022
தமிழாக்கம் : நிமிர்வு

**இலங்கையின் சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி மாவட்டத்தின் பலாங்கொடை நகரிலிருந்து அண்ணளவாக 24 கிலோமீற்றர் தூரத்தில் குரகல பகுதி அமைந்துள்ளது. அங்குள்ள முஸ்லிம்களின் மத முக்கியத்துவம் வாய்ந்த ஜெய்லானி பள்ளிவாசல் அமைந்துள்ள பிரதேசம் பௌத்த சிங்கள அரசால் திட்டமிட்டு ஆக்கிரமிக்கப்பட்டு வருகிறது. இது தொடர்பில் இமான் சலீம் டுவிற்றரில் எழுதியுள்ள பதிவு வருமாறு...**

எனது குடும்பத்தினருடன் இரண்டு தடவைகள் நான் குரகலவிலிருக்கும் ஜெய்லானி பள்ளிவாசலுக்கு (Jailani Mosque) சென்று இருக்கிறேன். 2017 இல் ஒரு தடவை, கடந்த வாரம் இரண்டாம் தடவை. இப்பிரதேசம் முஸ்லிம்களின் மத முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமாக 1953 ஆம் ஆண்டு சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்ட இடமாகும். ஆனால், 2021 ஆம் ஆண்டு தொடங்கிய "பௌத்த மறுமலர்ச்சியால்" அப்பிரதேசம் இன்று தனது அடையாளங்களை இழந்து நிற்கிறது.

இந்த பள்ளிவாசல் ஒரு மலைக்குகையில் அமைந்துள்ளது. சமய மற்றும் சட்ட அறிஞரான அப்துல் காதர் ஜய்லானி (Abdul Qadir Jailani) என்ற துறவியின் பெயரில் இத்தலம் அமைந்துள்ளது. ஆன்மீகத்தையும் இறைவனை உள்ளுணர்வால் உணர்ந்து கொள்வதனையும் போதிக்கும் சுபி இஸ்லாத்தை (Sufism) சேர்ந்த துறவி அவர். 12ஆம் நூற்றாண்டில் இந்த குகையில் 13 வருடங்களாக அவர் தியானத்தில் இருந்ததாக சொல்லப்படுகிறது. 1953 இற்கும் நீண்ட காலத்துக்கு முன்னரேயே இந்த இடம் முஸ்லிம்களின் யாத்திரைத் தலமாக இருந்து வந்திருக்கிறது.

2015 ஆம் ஆண்டு தொல்லியல் திணைக்களம் 3 ஆம் நூற்றாண்டில் இங்கு ஒரு பௌத்த பீடம் இருந்தது என்று சொல்லிக் கொண்டு ஆராய்ச்சியில் இறங்கியது. குரகலவை பௌத்த பிரதேசமாக மாற்றுவதற்கான அழுத்தம் கோத்தாபய ராஜபக்ச சனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பின் அதிகரித்தது. கோத்தாபயவின் தேர்தல் பிரச்சாரம் அவரது சகோதரனை பத்தாண்டுகளாக ஆட்சியில் இருக்க உதவிய சிங்கள பௌத்த பேரினவாதத்திலேயே தங்கியிருந்தது. 2019 இல் அவர் சனாதிபதியாக வந்து 2 ஆண்டுகளின் பின்னர் 'பௌத்த மறுமலர்ச்சி' இப்பிரதேசத்தில் தொடங்கியது. அங்கு ஒரு பௌத்த விகாரையும் அமர்ந்த நிலையில் ஒரு சிங்கத்தின் சிலையும் 1.5 பில்லியன் ரூபாய்களில் கட்டப்பட்டுள்ளன. 13 மாதங்கள் எடுத்து இந்த கட்டிடப் பணிகள் அன்பளிப்பு



பணத்திலேயே நடந்ததாக கூறப்படுகிறது. 2022 வைகாசி 15 ஆம் திகதி ஒப்சேவர் (Observer) பத்திரிகையில் வந்த ஒரு கட்டுரையில் இந்தப் பகுதி வேறு ஒரு தீவிரவாத மதப்பிரிவினரால் அன்று வரை ஆக்கிரமிக்கப்பட்டு இருந்ததாகவும் இன்று அது விடுவிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

2017 இல், மசூதியைக் கண்டுபிடிப்பது கடினமாக இருந்தது. மசூதியின் பராமரிப்பாளர்கள் உட்பட சுமார் 30 பேர் மட்டுமே அதைச் சுற்றியுள்ள பகுதியில் இருந்தனர். நாங்கள் அன்று சென்ற அசல்ப் பாதை பின்னர் மூடப்பட்டு விட்டது. அங்கு கட்டப்பட்டுள்ள பௌத்த தலத்துக்கு பேருந்துகளில் பெருவாரியாக மக்கள் வருகிறார்கள். அவர்களையும் கடந்து அந்த பௌத்த தலத்தின் ஊடாகத்தான் இப்போது நடந்து சென்று மசூதியை அடைய முடியும். போகும் வழியெல்லாம் உள்ள மரங்களில் பௌத்த பிக்குகளின் படங்கள் பொருத்தப்பட்டுள்ளன. மேலும் ஆயுதம் தாங்கிய பெருமளவான இராணுவத்தினர் காணப்பட்டார்கள். ஒரு சிறிய காவல் நிலையமும் இந்த இடதுக்கென பிரத்தியேகமாக கட்டப்பட்டுள்ளது.

நாம் முஸ்லிம் கலாச்சாரப்படி ஆடைகளை அணிந்திருந்ததாலும் சிறிய எண்ணிக்கையில் இருந்ததாலும் அங்கிருந்தவர்கள் எம்மை ஒரு விதமாக பார்த்தார்கள். பௌத்த வளாகத்தை சுற்றி பாதி தூரம் நடந்தால், இடதுபுறத்தில் மசூதிக்கு செல்வதற்காக ஒரு சிறிய பாதை உள்ளது. இது புத்த மத தளத்திலிருந்து சிறிது தொலைவில் உள்ளது, மற்றும் ஒப்பீட்டளவில் அமைதியாகவும் இருக்கிறது. பௌத்த யாத்ரீகர்கள் சிலர் எப்போதாவது அங்கு வருகிறார்கள். அவ்வாறு மசூதியை பார்க்க வருபவர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். மசூதிக்கு கிடைக்கும் அன்பளிப்புகள் அதனை ஓரளவு பராமரிக்க உதவுகின்றன. ஆனால், அதன் நீண்டகாலப் பேணுகை சந்தேகத்துக்கிடமானது.

கடந்த ஆண்டு பௌத்த வளாகத்துக்கு ராஜபக்சக்கள், சவேந்திர சில்வா, ரணில் விக்கிரமசிங்கா போன்றவர்கள் வருகை தந்துள்ளனர். இந்த வருகைகள் பௌத்த தலத்தின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகின்றன. இந்த நிகழ்வுகள் பற்றிய செய்திகளில் அங்கு இந்த மசூதி இருப்பதைப் பற்றி எந்த தகவலும் சொல்லப்படவில்லை. மசூதிக்கு அருகில் ஒரு தடைசெய்யப்பட்ட வலயம் இருக்கிறது. அங்கு புராதன பௌத்த பீடம் இருந்ததற்கான ஆதாரத்தை தேடி அகழ்வாய்வு செய்ய அதிகாரிகள் முயற்சித்து இருக்கிறார்கள். அங்கு அவர்களால் எதையும் கண்டு பிடிக்க முடியாமல் போனதால் முயற்சியை கைவிட்டு இருக்கிறார்கள். இவ்வாறாக மசூதி மீது எடுக்கப்படும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை தடுக்க முடியாத கையறு நிலையில் மசூதி நிர்வாகத்தினர் இருக்கின்றனர்.




இந்த ஆண்டு பங்குனி மாதம், பல உள்ளூர் முஸ்லிம் அமைப்புகள், தொல்லியல் துறையால் பாரம்பரிய சின்னமாக அறிவிக்கப்பட்ட போதிலும், மசூதியின் நுழைவாயில் மற்றும் பிரதான கொடிக் கம்பம் இடிக்கப்பட்டது குறித்து கவலை தெரிவித்து அரசுக்கு கடிதம் ஒன்றை வெளியிட்டன. மசூதியிலிருந்து கீழே இறங்கும் வழியில், ஒரு அலுவலகத்தில் உள்ள பதிவு புத்தகத்தில் பல ஆண்டுகளாக அங்கு வந்தவர்களின் பதிவுகளை காணலாம். அப்பதிவுகளில் பெரும்பாலானவை அஞ்சலி மற்றும் பக்தியை வெளிப்படுத்துவதை விட மசூதியைப் பார்க்கக் கிடைத்ததனால் ஏற்பட்ட நிம்மதியின் உணர்வை வெளிப்படுத்துகின்றன. அதாவது மசூதியின் அழிவுக்கான நேரம் நெருங்கி வருகிறது, அதற்கு முன்னதாக தம்மால் சரியான நேரத்தில் அங்கு வருவதற்கான பாக்கியம் கிடைத்ததாக அந்த செய்திகள் தெரிவிக்கின்றன.

(24 ஆம் பக்க தொடர்ச்சி)

நடத்தும் போது ஓடுகள் எங்கள் மேல் விழுகின்றன. அப்போது அந்த கர்ப்பிணியையும் சிறார்களையும் கீழே போட்டு விட்டு அவர்களை சூழ்ந்து நாங்கள் படுத்திருக்கிறோம். அப்படியே அன்று 11 ஆம் திகதி காலையில் இருந்து இரவு வரை அப்படியே இருக்கிறோம். சாப்பாடு தண்ணியில்லாமல் இருந்து பெரும் சோர்வு நிலைக்குள்ளாகி விட்டோம்."

"பின் மறுநாள் செயின் பிளக்குகள் வந்தன. அதிலிருந்து வந்தவர்களும் எங்களை வெளியே அழைத்து சுட ஆயத்தமானார்கள். ஆனாலும் ஒருவாறு தப்பித்தோம். அங்கிருந்த சூழலை பார்த்தால் எங்கள் குடும்பம் தப்பியதை ஒருவரும் நம்ப மாட்டார்கள். எங்களது அப்பாவை சைவம் குடும்பம் என்றே ஊரவர்கள் அழைத்தார்கள். சைவம் குடும்பத்திலும் ஒருவரும் மிஞ்சவில்லை என்றே அப்போது வெளியே கதை பரவியிருந்தது."

"எல்லாம் ஓய்ந்து வெளியே வந்து பார்த்தால் வாசலிலேயே சடலங்கள் இருந்தன. பின் வெளியே வந்து முன் வீட்டை திறந்து பார்த்தால் உள்ளே சடலங்கள் மலை போல் குவிந்து கிடந்தன. 12 பேருக்கு மேல் சடலங்களாக கிடந்தார்கள். என்ன செய்வதென்றே தெரியவில்லை. என்னுடைய தங்கச்சிமார் இருவரும் சடலங்களாக கிடந்தனர். அதனைப் பார்த்துவிட்டு கத்திய படி வெளியே வந்தேன்."

"இன்னொரு வீட்டில் நாயை பிடிக்க வந்தவரும் சுடப்பட்டார். பின் அதைப் பார்த்து கத்திய மனைவியும் பின் 9 மாதக் குழந்தையையும் நோக்கி கிரைனேட் எறிந்து கொன்று இருக்கிறார்கள். எங்கள் பகுதியில் வாடகைக்கு தங்கியிருந்து பல்கலையில் படிக்கும் முஸ்லீம் மாணவன் ஒருவரும் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார். பல்கலையை சேர்ந்த ஜீவானந்தம் என்பவரும் மதில் பாய்ந்து ஓடியபோது சுடப்பட்டிருக்கிறார்."

"வெளியே பாதையில் செயின் பிளக்குகள் கொல்லப்பட்டவர்களை நெரித்து இருந்தன. உயிரோடும் நெரித்ததாக சொல்கிறார்கள். அப்படியே சடலங்கள் நசிந்து துகள்களாகி விட்டன. கால்களே வைக்க முடியாதளவு இரத்தமும் சதையுமாக அந்த இடம் இருந்தது. பிறகு எங்கள் அண்ணையாக்கள் கூட்டி எரித்திருந்தார்கள்."

## "இந்திய இராணுவத்தினரை தமிழ்மக்கள் தமது மீட்பர்களாக கருதிக் கொண்டிருந்த நேரத்தில் இந்திய இராணுவத்தின் கோர முகத்தை தமிழ் மக்களுக்கு காட்டிய முதல் சம்பவமாகவும் வரலாற்றில் இந்த பிரம்படிப் படுகொலைச் சம்பவம் பதிவாகியுள்ளது"

"எங்களின் தங்கச்சிமாரையும் அம்மா முதலில் கூப்பிடும் போது அவர்கள் வரவில்லை. பின் பிணமாகவே கண்டோம். இந்தியன் ஆமி ஒன்றும் செய்யாது என்றே எல்லோரும் நினைத்தோம். ஒரு மாதத்துக்கு பிறகு தான் வெளிநாட்டில் இருக்கும் எங்கள் உறவுகளுக்கு எங்களின் குடும்பம் தப்பிய கதை தெரியும். எங்கள் வீட்டுக்கு கொஞ்சம் தள்ளி இருந்தவர்கள் இடம்பெயர்ந்து போய் விட்டார்கள். எங்கள் குடும்பம் தவிர அயலில் உள்ள பெரும் பாலானோர் கொல்லப்பட்டு விட்டனர்."

"எவ்வளவு சந்தோசமாக கூட்டாக அன்பான உறவுகளாகவே நாங்கள் வாழ்ந்து வந்தோம். இடம் பெயர்வதென்றால் கூட எல்லாருமே ஒன்றாக போக வேண்டும். ஒருவரை விட்டு போய் விடக் கூடாது என்பதற்காகவே ஒன்றாக இருந்தோம். எங்களது உறவினரின் கார் இருந்தும் ஒரு சிலர் மட்டும் போகக் கூடாது என்பதற்காகவே எங்கும் போகாமல் இருந்தோம். அயலவர், உறவினர் என்று எல்லோரும் ஒன்றாகவே வாழ்ந்தோம். நடக்கிறது எல்லோருக்கும் ஒன்றாக நடக்கட்டும் என்று எண்ணியபடியே இருந்தோம்."

"ஆனால், இப்போது அருகில் உறவென்றே யாருமில்லாத நிலைக்கு போய் விட்டோம். அந்த நேரமே இப்பகுதியில் உள்ள பலர் வெளிநாட்டில் இருந்தனர். குறித்த சம்பவத்துக்கு பிறகு எஞ்சியவர்களில் 95 வீதமானோர் வெளியிடங்களுக்கு அல்லது வெளிநாடுகளுக்கு குடிபெயர்ந்து விட்டனர். இன்னொரு குடும்பத்தில் மூன்று சிறுவர்களும்

தகப்பனும் கொல்லப்பட்டு விட தாயார் மட்டுமே தப்பியுள்ளார். அவர் இப்போது கொழும்பில் வாழ்ந்து வருவதாக அறிந்துள்ளோம்."

"தனம் அண்ணை என்ற அம்மாவின் உறவுக் காரர் ஒருவர் இந்திய ஆமி வந்தபோது பெரும் வரவேற்பளித்து கொண்டாடியவர், அவரிடம் இப்படி பிரச்சினை வரப் போகிறது என்று முதலில் கேட்ட போது, அவன் எங்களை பாதுகாக்க தானே வருகி றான் என்று கூறியவருக்கே முதலில் வெடி விழுந்து இறந்து போனார்."

"யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மருத்து வபீட மைதானத்தில் தரையிறக்கப்பட்ட சீக்கிய படையினரை புலிகள் கொன்றதாகவும், தமிழீழ விடு தலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை தேடியே எமது கிராமத்துக்கு வந்து இந்திய இராணுவம் தமிழ்மக்களை கொன்று கோரத் தாண்டவமாடியதாக பின்னர் கேள்விப்பட்டோம். அமைதிப்படையாக வந்த இந்தியன் இராணுவம் இப்படி கொடூரமான இரத்தக் களரியாக எங்கள் இடத்தை மாற்றிவிடும் என நாங்கள் கனவிலும் நினைக்கவில்லை."

இந்திய இலங்கை ஒப்பந்தம் 1987 ஆம் ஆண்டு யூலை மாதம் 29 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட பின்னர் வடக்குக் கிழக்குத் தமிழர் தாயகப் பகுதி களுக்கு அமைதிப்படை எனும் பேரில் வந்திறங்கிய இந்திய இராணுவத்தினரை தமிழ்மக்கள் தமது மீட்பர்களாக கருதிக்கொண்டிருந்த நேரத்தில் இந்திய இராணுவத்தின் கோர முகத்தை தமிழ் மக்களுக்கு காட்டிய முதல் நிகழ்வாகவும் வரலாற்றில் இந்த பிரம்படிப் படுகொலைச் சம்பவம் பதிவாகியுள்ளது.

**வாசகர்களே!**

*நிமிர்வு இதழை* **www.nimirvu.org** *இணையமூடாகவும் சமூக ஊடகப் பக்கங்களான* **facebook.com/nimirvu** *என்ற முகநூல் ஊடாகவும்* **youtube.com** *இல்* **nimirvu** *என்று தேடுவதனூடகவும் நிமிர்வு இதழின் அரசியல், சமூகம், பொருளாதாரம் குறித்த காணொளிகளையும் பார்க்க முடியும்.*

*இதுவரை வந்த நிமிர்வு இதழ்களை நூலகம்* **(noolaham.org)** *இணையத்தினூடாக அதன் இதழ்கள் பகுதியில் மின்னூல்* **(pdf)** *வடிவில் வாசிக்க முடியும்.*

**நிமிர்வு இதழ் தொடர்பிலான தங்களின் காத்திரமான விமர்சனங்களையும், ஆலோசனைகளையும் எங்களுக்கு எழுதி அனுப்பலாம். மேலும், வேறெங்கும் பிரசுரமாகாத தங்களின் அரசியல், சமூகம், பொருளாதாரம், பண்பாடு சார்ந்த கட்டுரைகளையும் அனுப்பி வைக்கலாம். தரமானவை பிரசுரிக்கப்படும்.**

**—ஆசிரியர்—**

## நிமிர்வு வாசகர்களே

தொடர்புகளுக்கு...

**தபால் முகவரி:**
**தமிழ் ஊடகத் திரட்டு,**
**லக்சுமி கட்டிடம்,**
**ஞானபாஸ்கரோதய சனசமூக நிலைய வீதி,**
**கல்வியங்காடு, யாழ்ப்பாணம்**
**தொ.பே.இல : 021 223 2121**
மின்னஞ்சல் முகவரி: nimirvueditor@gmail.com

# பிரம்படி - ஈழத்தில் இந்திய இராணுவத்தின் முதல் படுகொலை








**தொகுப்பு – அமுது**

ஈழத்தில் இந்திய இராணுவத்தின் முதலாவது தமிழினப் படுகொலைச் சம்பவமாக பதிவாகிய யாழ்ப்பாணம் – கொக்குவில் பிரம்படிப் படுகொலையின் 35 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு 12.10.2022 புதன்கிழமை அன்று பிரம்படி சந்தியில் அமைந்துள்ள நினைவுத் தூபியில் உணர்வெழுச்சியுடன் அனுட்டிக்கப்பட்டது.

1987ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11 மற்றும் 12 ஆகிய இரு தினங்களில் இந்திய இராணுவத்தினரால் “ஒப்பரேசன் பவன்” நடவடிக்கை மூலம் மிகவும் மோசமான முறையில் துப்பாக்கியால் சுட்டும், உயிருடன் வீதியிலும் ரயில் தண்டவாளத்திலும் குப்பறப்படுக்க வைத்து கவச வாகனங்களினால் நசித்தும் 50 க்கும் மேற்பட்ட தமிழ்மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்திய இராணுவத்தின் பிரம்படி படுகொலைகளின் கோரத் தாண்டவத்திலிருந்து தப்பிய நேரடி சாட்சியான பிரம்படி வீதி கொக்குவிலை சேர்ந்த எஸ். ஜெகதீஸ்வரி அவர்கள் அன்று நடந்த சம்பவம் தொடர்பில் விபரிக்கையில்,

“அன்று சம்பவம் நடக்கும் போது எனக்கு 32 வயது. 1987 ஆம் ஆண்டு ஒக்டோபர் 10 ஆம் திகதி இரவு 7 மணிக்கு பிறகு தான் எங்களுக்கு அதன் தாக்கம் தெரிய வந்தது. விமானங்கள் மேலே சுற்றிய வண்ணம் இருந்தன. சூட்டு சத்தங்கள் கேட்டபடியே இருந்தன. ஏன் இப்படியெல்லாம் நடக்கிறது என்ற காரணம் கூட எங்களுக்கு தெரியவில்லை. இங்குள்ள சிலர் ஊரை விட்டு வெளிக்கிட்டு வேறிடங்களை நோக்கி போனார்கள். ஆனாலும் சிலர் இந்தியன் ஆமி தானே எங்களை ஒன்றும் செய்யாது என்று நம்பியபடியே எங்கும் போகாமல் இருந்தோம்.”

“அப்படியே அன்று இரவு வழமையாக இப்படி நடக்கிறது தானே கோட்டை சண்டை நேரமும் இப்படித்தானே இருந்தது என்று அப்படியே நித்திரையாகி விட்டோம். மறுநாள் காலை 7 மணி இருக்கும் அயலில் இருக்கும் ஜெனகன் என்கிற சிறுவன் எங்களது அம்மாவை நோக்கி ஓடி வருகிறான். சின்ராசாக்கா ஆமி வந்திட்டான் என்று கத்தி சொல்கிறான். சிறிது நேரத்தில் நாங்கள் முன்னுள்ள அயல் வீட்டுக்கு சென்று நிற்கிறோம். எங்களோடு நிறைமாத கர்ப்பிணியொருவரும், சிறார்களும் இருந்தனர். அங்கே கொஞ்சம் கொஞ்சமாக ஆட்கள் கூடி விட்டனர். அப்போது ஆயுதச் சண்டையும் தொடங்கி விட்டது. எல்லோரும் வீட்டுக்கு வெளியில் இருந்த போது இராணுவத்தினர் வீட்டு வளவுக்குள் குதித்து எல்லோரையும் உள்ளே போகும்படி கூறினார்கள். உள்ளே இருக்கும் போது இராணுவத்தினர் உள்ளே வந்தார்கள். அப்போது எங்கள் அத்தான் ஆங்கிலத்தில் We are civilians. என்றார். எல்லோரும் இங்கே இருங்கள் என பணயக் கைதிகளாக வைத்திருந்தனர். பிரம்படி வாசிகசாலைக்கும் சந்திக்கும் இடைப்பட்ட நான்கைந்து வீடுகள் தான் இதில் அதிகம் பாதிக்கப்பட்டன.”

“அப்போது பெரிதாக மதில்கள், மரங்கள் இல்லாத காரணத்தினால் எங்கள் வீட்டில் இருந்து பார்த்தால் வாசிகசாலை சந்தி தெரியும். எங்கள் வீட்டடியில் நிற்கும் இந்தியன் ஆமி அங்கே சந்தியால் வருபவர்களை ஒவ்வொருவராக சுட்டுக் கொண்டிருக்கிறான். என்ன ஏதென்று தெரியாமல் வீதியால் வந்து சூடு வாங்கி பலியானவர்கள் அதிகம் பேராவர். எதிர் வீட்டில் ஒருவர் வீட்டில் புகும் போது அவரையும் சுட்டு விட்டார்கள். எங்களை கண்ணுக்கு முன்னால் சுமார் மூன்றடி தூரத்தில் வைத்துக் கொண்டு ரொக்கெட் லோஞ்சர் மற்றும் துப்பாக்கிகளால் தொடர்ந்தும் சுட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்படி தாக்குதல்

(22 ஆம் பக்கம் பார்க்கவும்)

இந்த இதழானது தமிழ் ஊடகத் திரட்டு நிறுவனத்தினரால் 20.11.2022 அன்று வெளியிடப்பட்டது